# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 25 செவ்வாய்க்கிழமை (08-04-2003)UTHAYAN - A Lively N onal Tamil Daily கதிர்:133


# பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் ஜெனீவாவில் நேற்று பெரும் பேரணி!

## தமிழீழக் கோஷமும், தாயக கானங்களும் தெருவெங்கும் ஒலித்தன

ஜெனீவா,ஏப்.8

ஐக்கிய நாடுகள் சபை நோக்கிய அமைதிப் பேரணி நேற்று ஜெனீவாவில மிகுந்த எழுச்சிபூர்வமாக நடைபெற்றது.

இந்தப் பேரணியில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டனர்.

ஜெனீவாவில் தற்போது மனித உரிமைகள் மையக் கூட்டத் தொடர் நடைபெற்றுவருகிறது. இதில் தமது கவனத்தை ஈர்க்கும் வகையில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து அமைதிப் பேரணியை நடத்தினர்.

1982ஆம் ஆண்டுமுதல் நடத்தப் பட்டுவரும் இவ்வாறான அமைதிப் பேரணியில், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, பிரான்ஸ், சுவீடன் போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் பங்கேற்று வருகின்றனர்.

நேற்றைய பேரணியில் தமிழீழ மக்களின் தேசியம், தாயகம், சுய நிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்திருக்கும் நாடுகள் அதனை நீக்கவேண்டும், உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரிலே பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்திருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டும், தமிழீழ மக்களின் மீன்பிடித்தடை முற்றாக நீக்கப்பட வேண்டும், இறுதி அரசியல் தீர்வு எட்டப்படும்வரை தமிழ் அகதிகளை நாட்டுகுத் திருப்பி அனுப்பக்கூடாது போன்ற பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

ஜெனீவாவின் பிரதான ரயில் நிலையத்திலிருந்து பேரணி தொடங்கியது. ஆரம்ப உரையினையடுத்து மங்கல இசையும் இடம்பெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆளுநர் மாளிகையில் ஒரு மணி நேரம் பேச்சு

# ஈழ அகதிகளைத் திருப்பி அழைத்து நாட்டில் மீளக் குடியமர்த்துங்கள்!



தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

## ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஜெயலலிதா வற்புறுத்தல்

சென்னை,ஏப்ரல்8

**தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை எவ்வளவு விரைவாகத் திருப்பி அழைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அழைத்து அவர்களை மீளக்குடியமர்த்தி மறுவாழ்வுப் பணிகளைச் செய்யுங்கள்.**

**தன்னைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இப்படி வற்புறுத்திக் கூறியிருக்கின்றார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 4 நாள் இந்திய பயணமாக நேற்றுக்காலை 9.20 மணிக்கு சென்னை வந்தார்.

சென்னை விமான நிலையத்தில் சந்திரிகாவை அமைச்சர் பொன்னையன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர் அதிபர் சந்திரிகா கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்குச் சென்றார். அங்கு அவரை முதலமைச்சர் ஜெயலலிதா பூச்செண்டு கொடுத்து வரவேற்றார்.

பின்னர் அவர்கள் சந்தித்துப் பேசினார்கள். இந்தப் பேச்சு ஒரு மணிநேரம் நடந்தது.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவுக்கு 4நாள் சுற்றுப் பயணமாக வந்துள்ள இலங்கை அதி

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஏழாலை விழிசிட்டியில் பரபரப்பு

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் மலக்குழியிலிருந்து நேற்று மீட்பு!

## மல்லாகம் முகாமிலிருந்து காணாமற்போனவர் எனத் தகவல்

வலி.வடக்கு,ஏப்.8

ஏழாலை தெற்கு விழிசிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அருகே பாழடைந்த வீடு ஒன்றின் மலக்குழியில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர் என்று கூறப்படும் அமிர்தலிங்கம் இராசன் (வயது 21) என்ற இளைஞனின் சடலமே அது என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

இவர் மல்லாகத்தில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமில் இருந்து சில தினங்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்தார் என்று மல்லாகம் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

மல்லாகத்திலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வந்த இந்த இளைஞன், கடந்த 4ஆம் திகதி மருந்து வாங்கி வருவதாகக் கூறிவிட்டு தெல்லிப்பழைக்குப் புறப்பட்டுச் சென்றபின் காணாமற்போயிருந்தார் என்று கூறப்படுகிறது.

இவர் காணாமற்போனது பற்றி சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கு விழிசிட்டியில் பாழடைந்த வீடு ஒன்றின் மலசல

(14ஆம் பக்கம் பார்க்க)

### இசை, நடன, நாடக விழாவுக்காக

# திருமலை உவர்மலை விழாக் கோலம் பூண்டது!

திருகோணமலை,ஏப்.8

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'பானுடத்தின் தமிழ் கூடல் II' நிகழ்வின் இசை, நடன, நாடக விழா இன்று திருகோணமலையில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இன்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை தினமும் மாலை 4மணி முதல் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி கலையரங்கில் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இதனையொட்டி திருகோணமலை உட்துறைமுக வீதி, உவர்மலை மத்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கடல் எல்லை தொடர்பாக நாளை கிளிநொச்சியில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.8

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான டிரிக்வே டெலிவ்சன் நாளை கிளிநொச்சிக்குச் செல்லவிருக்கிறார். அங்கு புலிகளின் தலைவர்களைச் சந்திக்கும் அவர், சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து ஆராய்வார் எனத் தெரிகிறது.

கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடல் எல்லைகள் தொடர்பாக இருந்துவரும் சிக்கல்கள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் எனவும் அறியப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் நலன்கள் பற்றிய இரு நாள் பயிற்சிப்பட்டறை

## அரசு - புலிகள் பிரதிநிதிகள் பங்கேற்பர்

சிறுவர் நலன்கள் தொடர்பாக ஆராயும் பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.


இந்தப் பயிற்சிப்பட்டறையில் அரசுப் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் திட்டங்கள் ஆகியன தொடர்பாக ஆராயப்படும். இப்பட்டறையை 'யுனிசெவ்' அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் 'யுனிசெவ்' அமைப்பின் வன்னி மாவட்டப் பிரதிநிதியான பெனி புறூனி நேற்றுக் கலந்துரையாடினார்.

(ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்







காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான புதிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைத் திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதமவிருந்தினரான இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாடா வெட்டி பணிமனையைத் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும் -

காரைநகர் உதவி அரசாங்க அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ள வே.சாம்பசிவம், தமக்கான நியமனக் கடிதத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் -

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். *(படங்கள் : ந.பாரதி - காரைநகர் செய்தியாளர்)*

# 480 சிங்கள,தமிழ் கலைஞர்கள் சங்கமிக்கும் மானுடம் பாடும் கலைஞர்களின் மகுட விழா

## திருமலை மானுடத்தின் தமிழ்க்கூடல் பற்றி புதுவை இரத்தினதுரை



திருகோணமலை,ஏப்.8

எமது தேசியத் தலைவரின் அமைதிக்கான உண்மையான தேடலின் சாட்சியாக மானுடம் பாடும் கலைஞர்களின் மகுடவிழா அமைகிறது.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இன்று ஆரம்பமாகும் 'மானுடத்தின் தமிழ்க்கூடல் - II' நிகழ்வில் இசை, நடன, நாடக விழாவை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'மானுடம் பாடும் கலைஞர்களின் மகுடவிழா' என்ற தலைப்பில் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை தலைநகரென நாம் நம்பியிருக்கும் திருகோணமலையில் எமது கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஆரம்பமாகும் இசை, நடன, நாடக விழா ஈழத்தமிழ் கலைஞர்களின் இன்னொரு பாய்ச்சலாகும். எமது கலைகளின் வேர்களையும், விழுதுகளையும் ஒரே அரங்கில் காணும் வாய்ப்பையும் சிங்களக் கலைஞர்களின் பாரம்பரியத்தையும், நவீனத்தையும் அதே அரங்கில் பார்க்கும் சந்தர்ப்பத்தையும் இந்த விழா ஏற்படுத்திக் கொடுக்கும். நாடெங்கும் இருந்தும் 480 கலைஞர்கள் ஒன்றிணையும் இந்தக் கலைவிழா ஒரு திரிவேணி சங்கமமாகும் தமிழகத்திலிருந்து பெரும் கலைஞர்களினதும் எமது சகோதர சிங்களக் கலைஞர்களினதும் இணைவும் எம் தாயக் கலைஞர்களின் ஒன்றுகூடலும் ஒன்றாகி இந்த 'விழா சமாதானத்திற்கான காலத்தில் உலகத்திற்கு சொல்லாத சேதி ஒன்றை உரத்துச் சொல்லும்.

எமது விடுதலை அமைப்பின் உலகளாவிய மானுட நேசிப்பையும் எல்லா இனங்களையும் அவர்களின் வாழ்வில் சகல வடிவுகளோடும் நாம் எடுத்தணைக்கும் பாங்கையும் நாம் நெருப்பாக வளர்க்கும் விடுதலை வீச்சையும் இந்த விழா எடுத்துக்காட்டும். இதுவரை எம்மீது திட்டமிட்டு உருமறைப்புச் செய்ய பூசிய பயங்கரவாத வர்ணத்தை இல்லாதழிக்கும். எமது தேசியத் தலைவரின் உண்மையான, அமைதிக்கான தேடலின் சாட்சியாக இந்தவிழா அமைகிறது. அவரது பணிப்பில்தான் இந்தக் கலைவிழா கால்கோள் கொண்டது.

கலைகள் யாவும் மானுடத்தின் பாடல். மானுடம் வதையுறும்போதும், மகிழ்வுறும்போதும் நெஞ்சிலிருந்து அப்பாடல் எழுந்து பரவும். உலகெங்கும் உள்ள இனங்களைக் கடந்தும் மொழிகளைக் கடந்தும் மதங்களைக் கடந்தும், நாடுகளைக் கடந்தும், நிறங்களைக் கடந்தும், இந்த மானுடப் பாடல் வியாபகம் கொண்டு எல்லோருக்குமாக, மனிதத்திற்குரியதாக இந்தக் கலைக்குரல் பொதுமை கொண்டிலங்கும். இன்று திருகோணமலையில் இருந்து கேட்கப்போகும் இந்தப் பாடலும் கூத்தும் இசையும் அசைவும் ஈழத் தமிழினத்தின் வலி உணர்த்துவதாகவும் அவர்களின் வலிமை உணர்த்துவதாகவும் இருக்கும். அதே வேளையில் எல்லா இனங்களுக்கிடையிலான இணைப்பையும் இது பேணிப் போஷித்துக்கொள்ளும். கலை பண்பாட்டுக்கழகத்தின் இந்த முன்னெடுப்பு சரியான காலத்தில், சரியான வழித்தடத்தில் எடுக்கும் ஒரு சரியான காரியமாக நாளை விதந்துரைக்கப்படும். எல்லாக் கலைஞர்களும் இணைந்து எல்லோருக்கும் பொதுவான ஒரு நேர்கோட்டில் இன்று சங்கமித்துக்கொள்கிறோம்.

பங்கேற்கும் சகல கலைஞர்களையும் மனதில் பூ மலர்த்திக்கொண்டு நான் பாராட்டுகின்றேன். பார்க்கவரும் அனைவரையும் வரவேற்று மஞ்சள் கலந்து நான் நீராட்டுகின்றேன்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-290)

# துப்பாக்கிகளுடன் சென்று ஈ.பி.டி.பியினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்

## களுவாஞ்சிக்குடியில் நேற்றுக் களேபரம்

களுவாஞ்சிக்குடி,ஏப்.8

பொலீஸாரின் பாதுகாப்புடன் வந்தனர் எனக் கூறப்படும் ஈ.பி.டி.பியினர் புலிகளுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். புலிகளின் அரசியல் அலுவலக வாசலில் வைத்துப் புலிகள் இயக்க உறுப்பினர்களிடமும் அந்தத் துண்டுப் பிரசுரங்களை நீட்டினர். அவர்கள் அதை வாங்க மறுக்கவே துப்பாக்கியைக் காட்டி அவர்களை மிரட்டினர். பொது மக்கள் சிலரை நையப்புடைத்தனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

"ஒரு கணம் நிதானமாகச் சிந்தியுங்கள் புலி உறுப்பினர்களுக்குப் பகிரங்கக் கடிதம் - 1" என்ற தலைப்பில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை பகிரங்கமாக விமர்சனம் செய்யும் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்ட சமயமே இந்தச் சர்ச்சை ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தை அருகிலும் வைத்தியசாலை அருகிலும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் பொலீஸாரின் பாதுகாப்புடன் நேற்றுக் காலை மேற்படி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

சந்தைக்கும் வைத்தியசாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் துண்டுப் பிரசுரங்களை அவர்கள் விநியோகித்த சமயம் மக்கள் அவற்றை வாங்க மறுத்துள்ளனர். அதனால் சீற்றமுற்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மக்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

பின்னர் பட்டிருப்பு கோட்ட புலிகளின் அலுவலகத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த புலி உறுப்பினரிடம் துண்டுப்பிரசுரத்தை நீட்டியுள்ளனர். அவர் அதை வாங்க மறுக்கவே பிஸ்டலைக்காட்டி அவரை மிரட்டியுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அலுவலகத்தினுள் இருந்த புலிகளின் உறுப்பினர்கள் வெளியே வந்தனர். அரசியல்துறைப் பொறுப்பாளர் கார்த்திக்கும் அங்கு வந்த பொலீஸாரிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் புலிகளின் அலுவலகத்துக்கு முன்னால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கூடினர். விடயமறிந்த களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணசேன கப்புறுகொட அவ்விடத்துக்கு வந்தார். ஈ.பி.டி.பி. உறுப்பினர்களிடம் பிஸ்டல்கள் இருப்பது குறித்து கார்த்திக் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

பிஸ்டல்கள் பொலீஸாரால் ஈ.பி.டி.பியினரின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டவை என பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதிலளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், பொது மக்கள் ஒன்றுகூடி ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை அங்கிருந்து செல்ல வைத்தனர் எனவும் கூறப்பட்டது. (எ)

# காரைநகருக்கான உதவி அரச அதிபர் பணிமனை நேற்று வைபவ ரீதியாகத் திறப்பு

காரைநகர்,ஏப்.8

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான புதிய உதவி அரசாங்க அதிபர் பணிமனை காரைநகர் சின்னாலடி பகுதியில் சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான பெயர்ப் பலகையை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் திரைநீக்கம் செய்து வைக்க, பணிமனையை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.




தொடர்ந்து காரைநகர் உதவி அரசாங்க அதிபராக வே.சாம்பசிவம் அரசாங்க அதிபரிடமிருந்து நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் வே. சாம்பசிவம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், யாழ்.பிராந்திய ஆணையாளர் கலாநிதி க.குணராஜா, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், காரைநகர் கடற்படையின் பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோர் உரை நிகழ்த்தினர். (எ-73)

# மறவன்புலோ ஆலயத்தில் புத்தாண்டு பூஜை வழிபாடு

## 100 பக்தர்கள் செல்ல அனுமதி

தென்மராட்சி,ஏப்.8

படையினரின் அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மறவன்புலோ ஸ்ரீவள்ளி அம்மன் ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நடைபெறும் விசேட பூஜையில் கலந்து கொள்வதற்கு 100 பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, பலாலி படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதையடுத்து விசேட தினங்களில் இந்த ஆலயத்திற்கு 100 பக்தர்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

கடந்த சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்ற பூஜையில் 100 பக்தர்கள் கலந்துகொண்டனர்.

(ஐ-117)

# மாணவி பெற்றோரிடம் ஒப்படைப்பு

சண்டிலிப்பாய்,ஏப்.8

தனது சுயவிருப்பத்தின் பேரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த 16 வயது பாடசாலை மாணவி ஒருத்தி அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மாதகலைச் சேர்ந்த இந்த மாணவியை சண்டிலிப்பாயில் உள்ள அரசியல்துறை கோட்ட அலுவலகத்தில் வைத்து வலி.மேற்கு கொள்கை பரப்புப் பிரிவின் பொறுப்பாளர் சரா நேற்று பெற்றோரிடம் ஒப்படைத்தார். (ஐ-135)

# துர்நடத்தையில் ஈடுபட முயன்ற பெண்ணும் இளைஞர்களும் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.8

வீதியோரமாக மறைவிடம் ஒன்றில துர்நடத்தையில் ஈடுபடும் நோக்குடன நின்றவர்கள் என்று கூறப்படும் இளம பெண் ஒருவரும், இரு இளைஞர்களும் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் கோப்பாய் இராசபாதையில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருக்கிறது.

வீதிக்கு சமீபமாக மறைவான இடத்தில் இளம் பெண் ஒருவருடன் இரு இளம் ஆண்கள் காணப்பட்டனர்.

அந்தப் பகுதிக்குச் சென்ற பொதுமக்களும், விடுதலைப் புலிகள் உறுப்பினர் சிலரும் அவர்கள் மூவரையும் விசாரித்தனர்.

மூவரும் முரண்பாடான முறையில் விவரங்களைத் தெரிவித்ததை அடுத்து அவர்களை எச்சரித்து விடுவித்தனர்.

சம்பந்தப்பட்ட பெண், சமூக நிறுவனம் ஒன்றின் ஊடாக புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஐ-3)

# வித்தியாசமான ஒரு தாக்குதலை வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

## ஈராக்கிய அமைச்சரின் எச்சரிக்கை அறிவிப்பு

பக்தாத்,ஏப்ரல்8

**'வித்தியாசமான தாக்குதலை மிக விரைவில் எதிர்பாருங்கள்' - இவ்வாறு நேற்று ஈராக்கியத் தகவல் தொடர்பு அமைச்சர் முகம்மட் சையத் அல் சகப் தெரிவித்தார். போர் தொடங்கிய பின்னர் முதன் முதலாக துப்பாக்கிகள் அதிக அளவில் முழங்கும் சத்தம் நேற்றுத்தான் கேட்டது. இந்நிலையில் அவர் எச்சரிக்கைத் தொனியில் இவ்வாறு கூறியிருப்பது பெரும் விபரீதம் நிகழப் போவதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.**

பக்தாத் நகரை முழுமையாகக் கைப்பற்ற அமெரிக்கத் தரைப்படையினர் உச்சக் கட்டப் போரை நடத்தி வருகின்றது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் குடியரசுப் படையினரும், தற்கொலைப் படையினரும் பக்தாத் நகரில் ஆயிரக் கணக்கில் இருப்பதால் சண்டை கடுமையாக உள்ளது.



தம்மிடம் சிக்கிய ஈராக்கிய வீரருக்கு பிரிட்டிஷ் படையினர் காட்டும் 'மனிதாபிமானம்' (?)

கடந்த 2 நாள்கள் நடந்த சண்டையில் சுமார் 3 ஆயிரம் ஈராக் வீரர்களை கொன்றுவிட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் இரவு பக்தாத் நகரை அமெரிக்கத் தரைப்படையினர் நாலாபுறமும் சுற்றி வளைத்தனர்.

இதனால், அமெரிக்க படையினரின் அனுமதியின்றி யாரும் பக்தாத்துக்குள் செல்லவோ அல்லது வெளியேறவோ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பக்தாத்தை மற்ற நகரங்களுடன் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகளும் அமெரிக்க படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை ஆயிரத்து 850 தடவைகள் பக்தாத் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால், பக்தாத் நகரம் புகை மண்டலத்துக்குள் மூழ்கி உள்ளது.

நேற்று அதிகாலை பக்தாத் நகரின் தென்பகுதியில் 6 சக்தி வாய்ந்த குண்டுகளை அமெரிக்க விமானங்கள் வீசின. அதைத் தொடர்ந்து தெருக்களில் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது.

ஈராக் போர் தொடங்கிய பிறகு நேற்றுத்தான் முதன் முதலாக துப்பாக்கிகள் அதிக அளவில் முழங்கும் சத்தம் கேட்டுள்ளது. சதாமின் மாளிகை அமைந்துள்ள டைகிரீஸ் நதியின் மேற்குக்கரையோரப் பகுதியில் அதிக அளவில் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

நேற்று அதிகாலை 5 மணிக்கு அமெரிக்காவின் பீரங்கிப்படை சதாம் ஹுசைனின் பிரதான அரண்மனைக்குள் அதிரடியாக நுழைந்ததாகவும்-

அதன்பிறகு அரண்மனைக்குள் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகவும் - அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

சதாமின் மாளிகை அருகே அமைந்துள்ள தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கட்டடம், அல்ரஷித் ஹோட்டல் மற்றும் முக்கிய கட்டடங்களை அமெரிக்க தரைப்படையினர் சுற்றிவளைத்து பிடித்ததாக நேற்று அமெரிக்கா அறிவித்தது. ஆயினும், பக்தாத்தின் புறநகர்ப்பகுதியில் உள்ள மாளிகையே பிடிபட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த அரண்மனையைச் சுற்றி அமெரிக்காவின் 'அப்ராம்ஸ்' ரக டாங்கிகள் அணி வகுத்து சுற்றி வருகின்றன.

இதற்கிடையே ஈராக் தகவல் தொடர்பு அமைச்சர் முகமட் சையத் அல்சகப் நேற்றுக்காலை பக்தாத்தில செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். பக்தாத் நகரம் பாதுகாப்புடன் நல்ல வலுவான நிலையில் இருக்கிறது. அமெரிக்கா சொல்லும் பொய்யை உலகம் நம்பக் கூடாது என்று அவர் அப்போது கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 'பக்தாத் நகருக்குள் வரும் அமெரிக்கப் படைகள் தோற்கடிக்கப்படும். ஏற்கனவே 4 பீரங்கிகள், 2 ஹெலிகொப்டர்களை அழித்து விட்டோம். மிக விரைவில் வித்தியாசமான தாக்குதலை நீங்கள் எதிர்பார்க்கலாம்' என்று தெரிவித்தார்.

நேற்று பக்தாத்தில் தாக்குதல் நடத்திய அமெரிக்க வீரர்கள் அனைவரும் இரசாயன தாக்குதலை எதிர்பார்த்து கவச உடை அணிந்து போரிடடனர். 'இன்று பக்தாத்தை முழுமையாக கைப்பற்றி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவோம் என்று அமெரிக்கத்தரைப்படையின் 3 ஆவது பிரிவு மேஜர் ஜெனரல் மைக்கேல் பிரிம்மிங்காம் கூறினார்.

ஆனால், அது அவ்வளவு எளிதில சாத்தியமாகுமா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. ஏனெனில், எந்த நேரத்திலும் ஈராக் வீரர்கள் சற்று மாறுபட்ட அல்லது இரசாயன தாக்குதலை நடத்தக் கூடும் என்ற பயம் அமெரிக்க வீரர்களிடம் உள்ளது.

இதனால், அவர்கள் அடிமேல் அடிவைத்துத்தான் பக்தாத்தின் மையப் பகுதி நோக்கி நகர்கின்றனர். (ஒ)

## சதாம் எதிர்ப்பாளர்களை களம் இறக்கும் அமெரிக்கா

நியூயோர்க்,ஏப்.8

ஈராக் அதிபர் சதாமுக்கு எதிராகச் செயற்படும் ஈராக் போராளிகள் ஆயிரம் பேரை களத்தில் இறக்கியுள்ளது அமெரிக்கா. ஈராக்கின் தெற்குப் பகுதியில் அமெரிக்கப் படையினர் வசமான பகுதிகளில் இவர்கள் செயற்படுவார்கள்.

ஈராக்கியப் போராளிகளை இவ்வாறு அமெரிக்கா பயன்படுத்துவது இதுவே முதல் முறையாகும். இவர்கள் அனைவரும் ஈராக் தேசிய காங்கிரஸ் தலைவர் அஹமது சலாபியின் கட்டுப்பாட்டில் செயற்படுபவர்கள் ஆவர்.

தெற்கு ஈராக்கில் அமெரிக்கப் படையினருக்கும் ஷியா போராளிகளுக்கும் இடையே இவர்கள் இணைப்பாளர்களாகச் செயற்படுவார்கள். அமெரிக்கா வசப்படுத்திய பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## பக்தாத்தில் வழக்கம்போலவே ரஷ்யத் தூதரகம் இயங்குகிறது

மொஸ்கோ,ஏப்.8

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ரஷ்யத் தூதரகம் வழக்கம்போல் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. தூதரகத்தை மூடிவிட்டு, ஊழியர்களைத் திரும்ப அழைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் மொஸ்கோவில் கூறினார்.

குண்டுவீச்சிலிருந்து தப்பித்துக் கொள்ள பாதுகாப்பான 'பாதாள அறை ரஷ்யத் தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையிலான தண்ணீர் வசதியும் மின்சார வசதியும் கொண்டது அத்தூதரகம். கடந்த 24 மணி நேரத்தில் அவ்வளாகத்துக்கு அருகில் எந்தவித அசம்பாவிதச் சம்பவமும் நடைபெறவில்லை என்றும் ரஷ்ய வெளியுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்யத் தூதரகத்தில் 15 அதிகாரிகளும், தேவைப்பட்டால் அவசர காலத்தில் அவர்களைப் பாதுகாப்பாக அழைத்துவரத் தேவையான. சிறப்பு குழுக்களும் உள்ளன. போர்ச் செய்திகளைச் சேகரிக்க 24 ரஷ்யப் பத்திரிகையாளர்களும் பக்தாத்தில் உள்ளனர். (ஒ)

## 'கெமிக்கல் அலி' கொல்லப்பட்டார்!

### பிரிட்டிஷ் இராணுவம் அறிவிப்பு

லண்டன்,ஏப்.8

ஈராக் அதிபர் சதாம்ஹுசைனின் நெருங்கிய உறவினரும் ஈராக்கின் தெற்குப் பிராந்திய இராணுவத்தளபதி



யுமான அலிஹாசன் அல்மஜித் அமெரிக்க விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் இராணுவம் நேற்றுத் தெரிவித்தது.

சதாமுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த குர்திஷ் இனத்தவரை 1988 ஆம் ஆண்டில் விஷ வாயுக் குண்டுகளை வீசி படுகொலை செய்தவர் இவர் என்று கூறப்படுகிறது. இதனால் இவர் 'கெமிக்கல்' அலி என்று அழைக்கப்பட்டார்.

இவரது மாளிகை பஸ்ரா நகரில் உள்ளது. நேற்றுமுன்தினம் கெமிக்கல் அலியின் மாளிகை மீது அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் சரமாரியாக குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

குண்டு வீச்சு நடக்கும்போது அரண்மனையில் கெமிக்கல் அலி இருந்தார். சரமாரியான குண்டு வீச்சில் அவரது மாளிகை நொறுங்கியது. இதில் கெமிக்கல்அலி பலியானார். அவருடன் அவரது பாதுகாவலரும் உயிர் இழந்தார்.

நேற்று பிரிட்டிஷ் இராணுவத்தினர் அவரது மாளிகைக்குள் புகுந்து தேடுதல் நடத்தினார்கள். அப்போது கெமிக்கல் அலியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

- இவ்வாறு பிரிட்டிஷ் இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. (ஒ)

## தற்கொலைப் படையினர் பக்தாத் வீதிகளில் குவிப்பு!

பக்தாத்,ஏப்.8

ஈராக் தலைநகர் பக்தாத்தின் தெருக்களில் சதாம் மகன் உதய் தலைமையிலான தற்கொலைப் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசுப் படைகள், சதாம் ஆதரவுத தீவிரவாதிகள், 'பாத்' கட்சியினர் மற்றும் இராணுவத்தினர் பெருமளவில் தெருக்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுவருவதாகவும் -

போர் ஆரம்பித்த பின்னர் பக்தாத் வீதிகளில் கறுப்புச் சீருடையில் தற்கொலைப் படையினர் காணப்படுவது இதுவே முதல் தடவை என்றும் - பக்தாத்தில் உள்ள சுயாதீனச் செய்தியாளர்கள் கூறுகின்றனர். (ஒ)



தாம் தாக்கியழித்த அமெரிக்க இராணுவ டாங்கி மீது ஈராக்கியர்.

## பக்தாத்தில் அமெ.விமானம் தரையிறங்கியது

பக்தாத்,ஏப்.8

அமெரிக்கப் படைகள் பக்தாத் விமான நிலையத்தைக் கைப்பற்றிய பிறகு முதல் தடவையாக அங்கு ஓர் அமெரிக்க விமானம் தரையிறங்கியது.

இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு அந்த விமானம் விமான நிலையத்தில் தரையிறங்கியது. இந்த விமானம் அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான சரக்கு விமானம் ஆகும்.

விமான நிலையத்தின் மேற்குப் பகுதியில் அந்த விமானம் பத்திரமாகத் தரையிறங்கியது. ஓடு பாதையில் அந்த விமானத்துக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை என்றும் - அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சோதனை ரீதியில் இந்த சி.130 ஹெர்குலீஸ் விமானம் தரையிறக்கப்பட்டதா? அல்லது அந்த விமானம் சரக்குகளை கொண்டு வந்ததா? என்பதை தெரிவிக்க அந்த அதிகாரி மறுத்துவிட்டார்.

ஒரே நேரத்தில் 3 விமானங்களை அங்கு தரையிறக்க முடியும் என்பதால், மேலும் சில அமெரிக்க விமானங்கள் அங்கு சரக்குகளைக் கொண்டுவந்து இறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈராக் புனரமைப்பில் பங்கேற்பதற்கு பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனிக்கு தடை!

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்ரன்,ஏப்.8

ஈராக்கில் போர் முடிவடைந்த பிறகு அமெரிக்க நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கும் புனரமைப்புத் திட்டங்களில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சிரியா ஆகிய நாடுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக் மீதான போருக்கு இந்நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதே இதற்கு முக்கிய காரணம்.

ஈராக் மீதான போர் செலவுகளுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் நிதி ஒதுக்கீடு செய்தது. போர்ச் செலவுக்கும் அதைத் தொடர்ந்து மேற் கொள்ளப்படவிருக்கும் புனரமைப்புப் பணிகளுக்கும் 7,700 கோடி டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

போருக்குப் பிறகு ஈராக் புனரமைப்புப் பணிகளில் ரஷ்ய நிறுவனங்கள் பங்கேற்க அமெரிக்கா விதித்துள்ள தடைக்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

போருக்குப் பிறகு ஈராக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளைத் தீர்மானிக்க வேண்டியது ஐ.நா. சபையே. தவிர அமெரிக்கா அல்ல. எனவே அமெரிக்காவின் தடையை ஏற்க இயலாது என ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் பெடோடோவ் தெரிவித்தார். (ஒ)

# யுத்தத்தை சந்திக்க விரும்பவில்லை: அடங்கி வாழ்வதற்கும் தயாரில்லை!

## தமிழரின் நிலை இது என்கிறார் சந்திரசேகரன்

கொழும்பு,ஏப்.8

"தமிழ்மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக நடந்த யுத்தத்தினால் அடைந்த துன்பங்கள் ஏராளமாகும். மீண்டும் ஒரு யுத்தத்தைச் சந்திப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. உரிமைகளை விட்டுக்கொடுத்து அடங்கி வாழ்வதற்கும் அவர்கள் விரும்பவில்லை. இந்த யதார்த்தத்தை இனவாதம் பேசுபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த 5 ஆம் திகதி மலையக மக்கள் முன்னணி, கோட்டை ரயில் நிலை யத்திற்கு முன்னால் நடத்திய சமாதானத்திற்கான சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் பி.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

சமயத்தலைவர்களும் நாடாளுமன்ற எம்.பிக்களும் மாகாணசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் பங்குகொண்ட இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதற்கு இனவாதம் பேசுவதே சிறந்த அணுகுமுறையென சில சந்தர்ப்பவாத் அரசியல் கட்சிகள் எண்ணிச் செயற்படுகின்றன. இந்த இனவாதிகள் வெற்றிபடையக் கூடாது. அதற்கு இந்நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் துணைபோக விரும்பவில்லை. சமாதானத்தின் மீதுள்ள நம்பிக்கையை தமிழ், சிங்கள மக்கள் பரஸ்பரம் உணர்ந்து செயற்படுவதற்கு இத்தகைய சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டங்கள் உதவும். இதுபோன்று பல சாத்வீகப் போராட்டங்களுக்கு மக்கள் இனமத பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

யாழ்மாவட்ட எம்பி. ரவிராஜ் கூறியதாவது:-

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக தென் மாகாணத்தில் மட்டுமின்றி கொழும்பை அண்மித்துள்ள பகுதிகளிலும் ஜே.வி.பியினரும் சிஹல உறுமய கட்சியினரும் இனவாதக் குரல் எழுப்புகின்றனர். அதற்கு இசைவாக ஜனாதிபதியும் ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்கா எம்.பியும் குரல் எழுப்புகின்றார். இத தகையவர்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பிரசாரங்களில் சாத்வீக வழியில் இவ்வாறு மேற்கொள்ளுவது வரவேற்புக்குரியதாகும். இதனை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்த வேண்டும். யாழ். மக்களின் சார்பில்இத்தகைய சாத்வீக நடவடிக்கைகள் வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட எம்.பி. அ.விநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:-

யுத்தம் செய்வதனால் நாடு சமாதானத்தைக் கண்டுவிட முடியாது; நாட்டின் அபிவிருத்தியைப் பேணவும் முடியாது. இனவாதம் பேசுபவர்கள் இதனைப் புரிந்துகொள்ள விரும்புவதில்லை. அவர்களுக்கு உண்மை வெல்லும் என்பதை நிரூபிப்பதற்கு இத்தகைய சத்தியாக்கிரகங்கள் மூலமே அறிவூட்டப்பட வேண்டும். அரசும், விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளும் சமாதான பேச்சுக்கள் வெற்றியடைய நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம் மலையகமக்கள் முன்னணியும் தமிழர் கூட்டமைப்பும் இது விடயத்தில் இணைந்து செயற்படும் - என்றார்.

மட்டு. மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியினரும் அதன் இனவாத அடிவருடிகளும் சிங்கள மக்கள் மத்தியில் சமாதானப் பேச்சுக்கள் பற்றி திரித்துக்கூறி பிரசாரம் செய்கின்றனர். அதனைத் தெளிவுபடுத்தி பிரசாரங்கள் மேற்கொள்ளவேண்டும். மலையக மக்கள் முன்னணி சாத்வீக சத்தியாக்கிரகத்தின் வாயிலாக அதனைச் செய்ய முயலுவது வரவேற்புக்குரியது. மக்கள மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த இது ஒரு சிறந்த வழி முறையாகும் - இவ்வாறு அவர் கூறினார்.

---

முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



## செல்வன் ச. வருன்

6240, BEAUSOLEIL, FRANCE இல் வசிக்கும
சாந்தலிங்கம் - குமுதினி தம்பதியரின்

### செல்வப் புதல்வன் வருன்

தனது முதலாவது பிறந்தினத்தை இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை France இல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். செல்வன் வருணை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சுரேஸ் (பெரியப்பா), குழந்தை (பெரியம்மா), சக்தி (சித்தப்பா), கொடிகாமத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சந்திரா மாமா (குடும்பம்) கொழும்பில் வசிக்கும் வசந்தி பெரியம்மா (குடும்பம்), லண்டனில் வசிக்கும் குமார் மாமா (குடும்பம்), கீரி பெரியம்மா (குடும்பம்) அனைவரும் எல்லாம்வல்ல இறையருளால் வெள்ளைப் பிள்ளையார் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சேச் லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: திரு.திருமதி வே.சண்முகலிங்கம் (அப்பப்பா - அப்பம்மா) (16176)

---

# நினைவஞ்சலி

| 16 ஆம் ஆண்டு | 12 ஆம் ஆண்டு | 11 ஆம் ஆண்டு |
|---|---|---|
| **செல்வி.ப.இராமநாதன்** (ஓய்வுபெற்ற, அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி) | **டாக்டர் சி.வேலாயுதன்** (கண் வைத்திய நிபுணர்) | **திருமதி ப.வேலாயுதன்** |
| தோற்றம் 24 - 06 - 1926 / மறைவு 05 - 04 - 1987 | தோற்றம் 04 - 10 - 1925 / மறைவு 31 - 10 - 1991 | தோற்றம் 14 - 10 - 1930 / மறைவு 16 - 06 - 1992 |

திதி: 08.04.2003

ஒன்று சேர்ந்து தோன்றவுமில்லை
ஒன்றுசேர்ந்து மறையவுமில்லை
இடையிட்டு வந்த இன்ப துன்பங்களை
சேர்ந்தே அனுபவித்தோம்
இறைவா உன்னடியில் மறுபடி சந்திக்க பிரார்த்திக்கும்... - சகோதரி.

126/4, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (16176)

---

# நீங்காத நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு |
|---|---|
|  |  |
| **செல்வி யோகநாதன் விஜிதா** (B.A. போதனை, ஆசிரியை, நல்லூர் தெற்கு, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்.) | **செல்வன் யோகநாதன் ஸ்ரீபவன்** (தரம் 2 மாணவன், யா/பரியோவான் கல்லூரி.) |
| மலர்வு 17.12.1975 | மலர்வு 04.08.1991 |
| உதிர்வு 19.04.2002 | உதிர்வு 03.04.1998 |

திதி: 08.04.2003

அன்பு என்னும் சோலையிலே
ஆடி வந்த பைங்கிளிகள்
இன்பமுடன் சேர்ந்திருக்கையில்
ஈசன் மனம் மாறியதேன்?
உங்கள் பிரிவு வந்திடவே
ஊனமுற்றோம் இவ்வேளை
எம்மனமோ உம் நினைவால்
ஏங்கித்தான் தவிக்கின்றன!
ஐங்கரன்தான் தனித்து
ஒருவனாகி நிற்கின்றான்
ஓடி ஒரு பொழுதில்
ஔ கணத்தில் வந்திடுவீர்
அன்னையின் கையால் கவிபுனைய
ஆறுமா நெஞ்சின் புண்?

உம் பிரிவால் துயருறும்:
**அம்மா, அப்பா, சகோதரன்.**

இ.யோகநாதன், 127, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (16475)

---

உ
குகமயம்

## தவத்திரு. வே.முருகேசு சுவாமி

அவர்களின்



## ஆறாம் ஆண்டு குருபூசைத் தின நிகழ்வுகள்

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- 09.04.2003 புதன்கிழமை

நிகழ்வுகள்

வரவேற்புரை:- ஞானபண்டித சேவாசுரபி Dr. சி.கதிரவேற்பிள்ளை
சிறப்புரை:- சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் ஸ்ரீகாயத்திரி பீடம், கொழும்புத்துறை.
இசைச்சொற்பொழிவு:- கவிமணி க.ஆனந்தராசா (அன்னைதாசன்)

மேற்படி குருபூசைத்தின நிகழ்வுகள் காலை 8.00 மணியளவில் ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் அறுபத்து மூவர் குரு பூசையும் இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அன்றையதினம் நடைபெறவுள்ள சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு. (C-27190)

தவத்திரு. வே.முருகேசு சுவாமி அவர்களது அடியார்கள் சார்பில் ஆ.அருணாசலம்.

---

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 29 - 12 - 1967



ஆண்டவன் அடியில் 15 - 03 - 1997

செல்வி

## ஆறுமுகம் பத்மாவதி (ஜெயந்தி)

திதி: 08.04.2003

அன்பான மகளே! ஆருயிர்த் தெய்வமே !
ஆண்டுகள் ஆறு அகன்றாலும் ஆறவில்லை நம் துயரம்
தாழவில்லை நம் சோகம், பாசமான மகளாய்
நேசமான சகோதரியாய் நீர் எம்முடனிருந்த
நினைவுகள் என்றும் எம் இதயத்தில் !!!

உனது பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அன்ரி, அண்ணாமார்,
அண்ணிமார்,அக்காமார்,அத்தான்மார்,
மருமக்கள், பெறாமக்கள், உற்றார்,உறவினர்.

"பாலவிகார்" மருதங்கேணி தெற்கு, தாளையடி. (C-27131)

உதயன்

# உலகையே அச்சுறுத்தும் அமெரிக்க ஆக்கிரமிப்பு

மிகப்பெரும் வல்லரசான அமெரிக்காவும் அதன் நேசநாட்டுப் படைகளும் ஈராக்மீது தமது ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பித்து 3 வாரங்கள் ஆகின்றன.

உலகின் மிகப்பெரும் இராணுவ வல்லாதிக்க சக்திகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் - இறைமையுள்ள தமது நாட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட பெரும் படையெடுப்புக்கு - ஈராக் மக்கள் வெகுண்டெழுந்து தீரத்துடன் முகங்கொடுத்து மூன்று வாரங்கள் தாக்குப்பிடித்து தமது சுதந்திர உணர்வை வீரத்துடன் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

ஈராக்கை விடுவித்தல் என்ற பெயரில் அமெரிக்காவும், அதன் நேச அணிகளும் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்புப் போருக்கு ஈராக் மக்கள் கிஞ்சித்தும் ஆதரவு தரவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அது மட்டுமல்ல, முழு அரபு உலகமுமே இந்த இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக வெகுண்டெழுந்துள்ளது. அரபுலகிலும் ஏனைய நாடுகளிலும் அமெரிக்காவின் ஆயுத அச்சுறுத்தல் நடவடிக்கைக்கு எதிராக எதிர்ப்புணர்வு பீறிட்டு வெடித்துள்ளது.

ஏன், அமெரிக்காவின் நேச அணிகளில் இடம் பெற்றிருக்கும் நாடுகளில்கூட அமெரிக்காவின் நாடு பிடிக்கும் போக்குக்கு எதிராகக் கடும் கண்டனம் கிளம்பியுள்ளது. பல நாடுகள் தமது பெரும்பான்மை மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் - அமெரிக்காவின் சர்வதேச பொலீஸ்காரன் தனத்திற்கு - துணை போயிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையைக்கூட தூசுக்கும் மதிக்காமல், மமதையுடன் அமெரிக்கா மேற்கொண்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப்போர் எதிர்காலத்தில் சர்வதேச அரசியல் சமநிலையில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. அமெரிக்காவின் நலனுக்கே பலத்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

★ ஐ.நா. சபையை ஒதுக்கிவிட்டு ஒருதலைப் பட்சமாக அமெரிக்கா, இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதால் எதிர்காலத்தில் தவறிழைக்கும் நாடுகளுக்கு எதிராக ஐ.நா. சபை மூலம் இராணுவ நடவடிக்கை அல்லாத - பொருளாதாரத் தடை போன்ற - வேறு நடவடிக்கைகளை எடுக்கவைக்கும் தார்மீகவலுவை அமெரிக்கா இழந்துள்ளது.

★ ஐ.நாவைப் புறந்தள்ளிவிட்டு, ஈராக்கை அமெரிக்கா தாக்கமுடியுமானால் அதேபோன்று தைவான் மீது சீனா ஏன் தாக்குதல் நடத்தமுடியாது? அமெரிக்காவின் போக்கு ஏனைய வல்லரசுகளுக்கு தவறான முன்னுதாரணமாகிவிட்டது.

இறைமையுள்ள ஒரு நாட்டின்மீது - மக்களின் மீது - தன்னுடையபாட்டில் அமெரிக்கா எதேச்சதிகாரமாக மேற்கொண்ட ஆக்கிரமிப்புப்போர் மனிதகுலத்திற்கு எதிரான போர்க் குற்றமாகக் கருதப்படக்கூடியது; கருதப்படவேண்டியது.

மனிதகுலத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கின்றது என்ற நொண்டிக்குற்றச்சாட்டை முன்வைத்துத்தான் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்த முயன்றது அமெரிக்கா.

தனது நாட்டின் தலைநகர் வீழ்ச்சியடையும் நிலைவரையான இந்த மூன்றுவார காலப்போரில் - தன்னுடைய நாடே அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இராணுவ அடக்குமுறைமூலம் அடிபணியும் நிலைமை ஏற்பட்டவரைகூட - அத்தகைய ஆயுதம் எதையுமே ஈராக் பயன்படுத்தவில்லை. அதுவே, அவ்வாறான ஆயுதங்கள் பற்றிய குற்றச்சாட்டு அமெரிக்கா கட்டவிழ்த்துவிட்ட கட்டுக்கதை என்பதை உணரவைக்கப் போதுமானதாகும்.

முழு ஈராக்கையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தபின்னர், தான் ஏற்கனவே கூறிய பொய்க்குற்றச்சாட்டை உண்மைப்படுத்துவதற்காக பேரனர்த்தம்தரும் இரசாயன ஆயுதங்களை அமெரிக்கா தானாகவே கொண்டுவந்து நுழைத்து, தன்னை நியாயப்படுத்த முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஈராக்கின் எண்ணெய் வளத்தில் கண்வைத்துள்ள அமெரிக்கா, அந்த நோக்கத்தைத் தான் அடைவதற்காக தன்னுடைய பொம்மை நிர்வாகம் ஒன்றை ஈராக்கில் பதவியில் அமர்த்துவதற்காக எத்தகைய கீழ்த்தரமான செயலை மேற்கொள்ளவும், அதை நியாயப்படுத்தும் வகையில் பொய்க் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டுப் பிரசாரப்படுத்தவும் தயங்காது என எதிர்பார்க்கலாம்.

---

யாழ். பிரதம தபாலகத்தில்

## மின்கட்டணம் செலுத்துவதற்கு தனிப்பிரிவு, ஊழியர் அவசியம்

### பொதுமக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்பிரதம தபாலகத்தில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு பொதுமக்கள் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் -

இதேவேளை, அங்கு கடமையில் இருக்கும் உத்தியோகத்தர்களும் சிரமங்களுக்கு மத்தியிலேயே கட்டண அறவீட்டுப் பணியை மேற்கொள்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் ஏனைய பிரதம தபாலகங்களில் மின் கட்டணம் அறவிடுவதற்கெனத் தனியான பிரிவு அமைக்கப்பட்டு அதற்கென உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் மாத்திரம் ஏனைய கடமைகளில் ஈடுபட்டுவரும் உத்தியோகத்தர்களே இப்பணியையும் கவனிக்க வேண்டியுள்ளது. இதனால், மின் கட்டணம் செலுத்தச் செல்வோர் நீண்ட நேரம் காத்துநின்றே பணம் செலுத்த வேண்டியுள்ளது. மின்கட்டண அறவீட்டுக்கென தனியான பிரிவோ அல்லது இதற்கென தனியான உத்தியோகத்தர்களோ இங்கு ஏற்படுத்தப்படவில்லை.

நாள் ஒன்றுக்கு சுமார் 50 தொடக்கம் 110 பேர் வரை மின் கட்டணம் செலுத்தச் செல்வதாகவும் -

சில நாள்களில் பலர் திரும்பிச் சென்று மறுநாள் வர வேண்டியிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-15)

---

## திருவீதி மான்மியம்

**மம்மி வரைந்த பதில்**

ஆனைக்கோட்டை
03-04-2003

ஐய்யோ! பிள்ளை உண்ணாணை
என்னால் வர முடியுமோ?
அப்பு இப்ப முடங்கிப்போய்
ஆறு மாதம் ஆகுது
ஆனைக்கோட்டை காணியில்
ஆரோ குடி இருக்கிறான்!
கோற்று போட கொப்பருக்கு
கூனிப் போச்சு முள் எலும்பு
புடைவை கடை பல ஏறியும்
புதிய மக்சி கிடைக்குமோ?
இங்கிலீசு பேசாமல்
இலண்டன் வந்தும் பலன் என்ன?
கந்தசாமி மாஸ்டரும்
கடுமையாக எதிர்க்கிறார்.

அன்பு மறவாத தாய்
ஆச்சிமுத்து

*பின் குறிப்பு:*
வெள்ளைக்கார மாப்பிள்ளைக்கு
உழுந்து திரித்து அனுப்புவேன்.

---

## 'யுனிசெவ்' அமைப்பின் ஆதரவுடன் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு பிரசாரம்

சண்டிலிப்பாய்,ஏப்.8

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 'யுனிசெவ்' அமைப்புடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் 'எயிட்ஸ்' நோய் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

இக்கருத்தரங்குகளில் 'எயிட்ஸ்' நோய் பற்றிய விளக்கவுரைகளும், இது தொடர்பான வீடியோ படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என பிரதேச ரீதியாக இந்தப் பிரசாரக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

அண்மையில் சண்டிலிப்பாய்(வலி.தென்மேற்கு) பிரதேச செயலர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட 'எயிட்ஸ்' விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதேச செயலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வலி.மேற்கு பிரதேச செயலர் பணிமனை, வலி.வடக்கு, பிரதேச செயலர் பணிமனை ஆகியவற்றிலும் 'எயிட்ஸ்' விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் அண்மையில் நடத்தப்பட்டுள்ளன.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளிலும் இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் 23 'எயிட்ஸ்' நோயாளிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் -

இவர்களில் 16 பேர் மரணமடைந்துவிட்டனர்; ஏழு பேர் மரணத்தை எதிர்பார்த்தவாறு உள்ளனர் என்றும் -

இதைவிட, யாழ்.மாவட்டத்தில் 400இற்கும் அதிகமான 'எயிட்ஸ்' நோயாளர்கள் இருக்கின்றனர் என்றும் - மேற்படி கருத்தரங்கை நிகழ்த்திவரும் பேராளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 'எயிட்ஸ்' நோய்த்தாக்கத்துக்கு உள்ளானோர் இலைமறைகாய்களாக வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, உயிர்க் கொல்லியான இந்த நோய் பற்றிய பூரணமான அறிவு மக்களுக்கு இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்றும் - மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கில் - தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

---

## புலி உறுப்பினர் தாக்கப்பட்டமை குறித்து நேற்று விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப்.8

அரசியல் பணிக்காகச் சென்ற விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொடிகாமம் பகுதியில் வைத்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பிராந்திய இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா விசாரணையை மேற்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் நிஷாந்தன், பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் போராளி இசையாளன் ஆகியோரும், பொலீஸார் தரப்பில் கொடிகாமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி.சேனதீர மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸ் கான்ஸ்டபிள் விக்கிரம ஆராய்ச்சி ஆகியோரும் விசாரணைக்கு சமுகமளித்தனர்.

இதன்போது சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸ் கான்ஸ்டபிளை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட பொலீஸ் கான்ஸ்டபிள் மீது பூரண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் -

சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் தவறிழைத்ததாகத் தெரியவந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் -

இதுதொடர்பான பூர்வாங்க அறிக்கையை ஒருவார காலத்துக்குள் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் சமர்ப்பிப்பதாகவும் -

கொடிகாமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். கொடிகாமம் சச்சாய் வீதியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி அரசியல் பணிக்காகச் சென்ற மேற்படி விடுதலைப் புலி உறுப்பினர், பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தாக்கப்பட்டது தொடர்பாகவே இந்த விசாரணை நடைபெற்றது.

(ஒ-5)

---

மலசலகூடம் கட்டுவது குறித்த

## யு.என்.எச்.சி.ஆர். திட்டத்தால் பொதுமக்கள் தரப்பில் விசனம்

வலி.வடக்கு,ஏப்.8

கடந்தகால யுத்த அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த மலசலகூடங்களை புனரமைத்துக் கொடுக்கும் அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயத்தின் திட்டம் குறித்து பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் சேதமடைந்த மலசல கூடங்களை மீள அமைத்துத்தரும் திட்டம் ஒன்றை அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயம் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால், இத்திட்டத்தின் கீழ் மூன்று வீடுகளுக்கு ஒரு மலசல கூடம் என்ற அடிப்படையிலேயே அமைத்துத் தர முடியுமென அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய அலுவலகம் தெரிவித்துள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காணிகளுக்கு எல்லைகள் போட்டு, கதவுகளை தாழிட்டு, வாழும் மக்களின் வாழ்க்கை முறையில் இவ்வாறு 3 வீடுகளுக்கு ஒரு மலசலகூடம் என்ற நடைமுறை தேவையற்ற சச்சரவுகளை உருவாக்கும் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

அரியாலை மத்தி, வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மலசல கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 3 வீடுகளுக்கு ஒரு மலசலகூடம் என்ற விதி காரணமாக மலசல கூட நிர்மாணிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-86)

---

**நாளை**

பங்குனி 26
புதன்கிழமை
(09.04.2003)
திதி : ஸப்தமி
நண்பகல் 12.27 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 2.00 வரை.
சுபநேரம் : 4.37 - 6.07
ராகுகாலம் : 12.07 - 1 .37
(பழைய நேரப்படி)

---

**உதய வாக்கு**

பெரிய நம்பிக்கைகளே பெரிய மனிதர்களை உண்டு பண்ணியிருக்கின்றன.

---

## மெய்வன்மை அலுவலர்களை தெரிவுசெய்ய நடவடிக்கை

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்குரிய மெய்வன்மை உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றி வரும் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபாடு,ஆர்வம் கொண்டு கடமையாற்றி வருபவர்களிடையே இருந்து மெய்வன்மை உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மெய்வன்மை உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சையை கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு மே மாதம் 11 ஆம் திகதி நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் நடைபெறும் மெய்வன்மைப்போட்டிகளை சிறந்த முறையில் நடத்துவதற்கு இந்த உத்தியோகத்தர் மூலம் பயிற்சியளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சையில் சித்தியடையும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை காலத்துக்குக் காலம் கல்வி அமைச்சு வழங்கும் எனவும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(ஒ-152)

# எழுதுமட்டுவாழ் பாடசாலையை சொந்த இடத்தில் இயக்க ஏற்பாடு

## அமைச்சர் மகேஸ்வரன் உறுதிமொழி

இடம்பெயர்ந்து இயங்கும் எழுதுமட்டுவாழ் அரசினர் வித்தியாலயததை மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயமும், எழுதுமட்டுவாழ் அ.த.க. வித்தியாலயமும் இணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டி அண்மையில் மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அமைச்சர் மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பெற்றோரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அத்துடன், அவ் இரு பாடசாலைகளும் ஒன்றிணைந்து நடத்திய மெய்வன்மைப் போட்டி பாராட்டுக்குரியது. ஏனைய பாடசாலைகளுக்கும் இது ஓர் எடுத்துக்காட்டு என்றார். (எ-ரி)

## பயிற்சி முகாம்

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் அணித் தலைவர் பயிற்சி முகாம் எதிர்வரும் 17ஆம் திகதி சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில நடைபெறவுள்ளது.

17ஆம் திகதி காலை 8.00 மணி முதல் 18ஆம் திகதி மாலை 4.30 மணிவரை அணித் தலைவர் பயிற்சியும், 8ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் மாலை 4.30 மணி வரை அறுவர் தலைவர் பயிற்சியும் நடைபெறும் என மாவட்டச் சாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ)

## வாராந்த நிகழ்வு

சண்டிலிப்பாய்,ஏப்.8

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் ..ஆம திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு மாணவர்களின் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவிகள் செல்வி சயனுதா இராமகிருஷ்ணன் "கலைவளர்ச்சியும ஆலயங்களும்" என்ற விடயம் பற்றியும்-

செல்வி யாழினி கனகேஸ்வரன் "காரைக்கால் அம்மையார்" என்ற விடயம் பற்றியும், செல்வன் குகதாசன் கோவர்த்தனன் "இனிய தாளினைப்பை இருபோதும்" என்ற விடயம் பற்றியும் -

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர் செல்வன் ஜெயகாந்தன் ஜெயதீஸ்வரன் "குருவாய் வருவாய்" என்ற விடயம் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவர்.(எ-135)

## கரவெட்டி தேவாலய புனித கெபியில் வழிபாடு ஆரம்பம்

வடமராட்சி,ஏப்.8

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித வியாகுல அன்னையின் 'கெபி'யில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

அன்று காலை 6மணிக்கு கூட்டுத் திருப்பலிப் பூசையுடன் வழிபாடுகளை யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் ஆயத்த வழிபாடுகளில் யாழ்.பெரிய ஆசனக் கோயில் பங்குத்தந்தை அருட்திரு. மைக்கேல் சவுந்தரநாயகம் அடிகளார், யாழ்.பெரிய குருமட போதனாசிரியர் அருட்திரு. டேவிட் அடிகளார் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. இருதயதாஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

எதிர்காலத்தில் வருடந்தோறும் இத் திருத்தலத்தில் 6ஆம் வெள்ளி வழிபாடுகள் நடைபெறுமென கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு. ஜே.பி.அனரனி அடிகள் தெரிவித்தார்.(ஓ-173-36)

## சுபானு வருட பஞ்சாங்கம் இலவசம்

சண்டிலிப்பாய், ஏப்,8

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், தமிழ் புது வருடப்பிறப்பை முன்னிட்டு வருடம்தோறும் வெளியிட்டு வரும் பஞ்சாங்கத்தை இம்முறையும் வெளியிட்டுள்ளது.

இலவசமாக இந்தப் பஞ்சாங்கத்தைப் பெற விரும்புபவர்கள் நீள என்வலப்பில் தங்கள் சொந்த முகவரியை எழுதி 6ரூபா 75சதம் பெறுமதியான முத்திரையை ஒட்டி வைத்து தபால் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இலவசமாக சுபானு வருட பஞ்சாங்கம் அனுப்பி வைக்கப்படும் என்றும் -

விண்ணப்பங்கள் யாவும் "பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலி வீதி, கொழும்பு - 4" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

# ஆலயங்களுக்கு காசோலை இந்து அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம்,ஏப்.8

இந்து சமய விவகார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான காசோலைகளை வழங்கினர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 174ஆலயங்கள் இந்து நிறுவனங்கள மற்றும் விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றிற்குரிய காசோலைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-5)

## காணவில்லை



நவாலி கிழக்கைச் சேர்ந்த

**பாஸ்கரன் ரவிச்சந்திரன்**

(வயது13) என்பவரை மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. உயரம் 4'X6", பொதுநிறம் உடையவர். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் உள்ள விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**திருமதி கனகமணி ஞானரத்தினம்**
குமரன் மில் முன்பாக,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

(16493)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ். பல்கலைக்கழகத்தின்
ஐந்தாவது துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள
பேராசிரியர்

**சுப்பிரமணியம் மோகனதாஸ்**

அவர்கள் பனை தென்னை வள அபிவிருத்திக்காக கடந்த பல ஆண்டுகளாகத் தன்னலமற்ற தனது மகத்தான சேவையினால் வள அபிவிருத்தியினைப் பல்கலைக்கழகக் கல்வி நிலைக்கு உயர்வடைய அயராது உழைத்து வரும் பெருந்தகையர், புதிய பதவியில் மேலும் சிறந்த சேவையினை வழங்கி பனை தென்னை வள அபிவிருத்தி உயர்வடையவும், அதை நம்பி வாழும், உழைக்கும் மக்களின் வாழ்வு மேன்மையுறவும் தொடர்ந்தும் தங்கள் சேவையை எமக்குத்தொடரவும் இறைவனை வேண்டி தங்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புக்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ வேண்டுமென சங்கங்கள், மாவட்ட இணையங்கள் சார்பில் மனமார வாழ்த்துகிறோம்.

*கண்டி வீதி,*
*கிளிநொச்சி.*
(C-27202)

*வடமாகாண பனை தென்னை வள*
*அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின்*
*பேரிணையம்.*

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின்
முன்னாள் தலைவர்

**அமரர் குட்டியர் குருநாதன்** (ஜே.பி.)

அவர்கள் 07.04.2003 இல் காலமாகிவிட்டார். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

*கோட்டைக்காடு,*
*மல்லாகம்.*
(16495)

ஆலய பரிபாலனசபையும்
இந்து இளைஞர் தொண்டர்சபையும்

## பதினாறாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 - 09 - 1969



உதிர்வு 08 - 04 - 1987

அமரர்

**சற்குணநாதன் நந்தகோபன்**

(மீசாலை மேற்கு)

நாநிலத்தில் வந்துதித்த நந்தகோபனே!
மீசாலைப் பதி விளங்கிடவே வந்துதித்து
பேசாமல் நீ சென்றதனால் பெற்றமனம் வேகுதடா!
உன்பாசமுகம் பார்த்து பதினாறு ஆண்டுகள் ஆனதடா!
நேசமாய் உன் நினைவு நெஞ்சை வாட்டுதடா.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார், தம்பி,
தங்கை மகன், மருமக்கள்,
நண்பர்கள், உறவினர்கள்.
லயன் சி.சற்குணநாதன் (Ret.T.A.)

*"பிருந்தாவனம்"*
*மீசாலை மேற்கு.*
*மீசாலை.*
(16489)

## முதலாம் வருட நினைவில்...

மலர்வு 27 - 01 - 1932



உதிர்வு 08 - 04 - 2002

**அமரர் A.C.செபநாயகம்**

(ஓய்வுபெற்ற அரச அதிபர், மன்னார்)

அன்பின் அப்பா!

நிஜமாக இருந்த நீங்கள் நிழற்படமாய் மாறி
இன்றுடன் ஆண்டு ஒன்று.
நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்த பாதை திறந்தது
ஆனால், அதைக் காணாமல் உங்கள் கண்கள் மூடிக்கொண்டன
எங்கள் உருவாக்கலில் ஏணிப்படிகளாய் நின்ற,
உங்களை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.
நீங்கள் கடந்து வந்த பாதை கடினமானது
இருப்பினும், உங்கள் ஆளுமையால் நீங்கள்
சாதித்தமை ஏராளம்.
மக்கள் சேவையில் மனம் மகிழ்ந்தீர்,
வறிய மாணவரின் கல்விக்கு உதவிசெய்தீர்
உங்கள் நற்செயல்கள் இறைவனின் அருட்கொடைகள்
உங்கள் நினைவுகளுடனும் இறைவனின் உதவியுடனும்
நாமும் உம்வழி நடப்போம்.

*நாவலி தெற்கு,*
*மானிப்பாய்.*
(16282)

உங்களன்பு மறவா
**பிள்ளைகள்.**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!

மாபெரும் அதிரடி

மலிவு விற்பனை

பட்டுச்சாரி வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ்,
சல்வார் கமீஸ்
கவுண் வகைகள்,
பேபி கவுண் வகைகள்

06.04.2003 முதல் 14.04.2003 வரை

5000/-ரூபா மேல் கொள்வனவு செய்பவர்களில் ஆணுக்கு அழகிய T சேட் ஒன்றும் பெண்ணுக்கு அழகிய பிளவுஸ் ஒன்றும் அன்பளிப்பு



மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்
(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)
10, 11, பெரியகடை வீதி
(மலாயன்கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.
(C/27156)

# மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்குமானால் அரசியல்வாதிகளே அதற்குப் பொறுப்பு

**அரசியல் வாதிகளும் ஊடகங்களுமே யுத்தத்தை ஆரம்பித்தனர் - தூபமிட்டனர். யுத்தத்தின் கொடுமை காரணமாக சமாதானத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. ஊடகங்களும் இதன் அடிப்படையில் மாறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு உதாரணம் 02.04.2003 ஆம் திகதிய 'லங்காதீப' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம். அதனை இங்கு தமிழில் தருகின்றோம்.**

ஓராண்டு காலத்திற்கு மேலாக போர்நிறுத்த ஒப்பந்தம் பேணப்பட்டு வரும் நிலையில், நாம் சமாதானத்தை அண்மித்துள்ள இவ்வேளையில், நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலை நிறுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு பிரதமர் ரணில்



வக்கிரமசிங்க சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளதாக அறியவந்துள்ளது. சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வேளையிலும் நாட்டின் ஒருமைப்பாடு கருதி, அரசியல் பேதங்களை மறந்துவிட்டு யாவரும் ஒன்றிணைந்து செயற்பட சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்புவிடுத்தமை எமக்கு ஞாபகத்திலுள்ளது. நாட்டின் சாதாரண பொது மக்களின் நன்மை கருதி நிரந்தர சமாதானத்தை உருவாக்க சகல அரசியற் கட்சிகளும், விசேடமாக ஸ்ரீல. சு.கட்சி மற்றும் ஐ.தே.கட்சி ஆகிய முக்கிய இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென மகாநாயக்கதேரர் அரசியல் தலைவர்களிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளார். பேராயர் உட்பட மற்றும் கத்தோலிக்க குருமார் போன்றோரும் பல தடவைகள் அரசியல் தலைவர்களிடம் இதுபோன்ற வேண்டுகோள்களை விடுத்துள்ளனர். அண்மையில் கத்தோலிக்கத் திருச்சபையும் பத்திரிகைகள் மூலமாக அரசியல் கட்சிகளிடம் இதுபோன்ற கோரிக்கையை விடுத்திருந்தது. நாட்டில் சகல பொதுமக்களது பிரார்த்தனை நிரந்தர சமாதானம் உருவாக வேண்டும் என்பதே என போர் நிறுத்தத்தின் பின்னர் உருவாகியுள்ள அமைதிச் சூழ்நிலை குறித்து பொதுமக்கள் வெளிப்படுத்தும் உணர்வலைகள் மூலம் தெரிந்துகொள்ளமுடிகிறது.

சமாதானப் பேச்சுக்களின் முடிவின் இருதரப்பினரின் இணக்கப்பாட்டின் மத்தியில் நிரந்தர சமாதானம் எட்டப்படும்வரை, நாட்டில் தற்காலிக அமைதி மட்டுமே நிலவுவதாகக் கூறித்தான் தெரிந்துகொள்ளவேண்டும் என்றில்லை. நாட்டில் சமாதானமுயற்சிகளுக்கான நடவடிக்கைகளை முதலில் ஆரம்பித்தவர் ஜனாதிபதி சந்திரிகாவே. எவ்வித மாற்றங்களுமின்றி அவற்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இச்சமாதான முயற்சிகளுக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக ஜனாதிபதி பல தடவைகள் தெரிவித்துள்ளார். இவ்விரு தலைவர்களும் சமாதானத்தை அடையும் இம் முயற்சிகளில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர். அதனை வலியுறுத்தும் வகையில் கருத்தும் வெளியிட்டுள்ளனர்.ஆனால், சமாதானத்தின் பெயரால் பேதங்களை மறந்து இவ்விரு தரப்பினரும் விரைவில் ஒன்றிணைந்து செயற்படமுடியாதது ஏன்? இதுவரையில் அவ்விதம் ஒன்றிணையாததற்குக் காரணம் என்ன? நாட்டினதும், மக்களினதும் துரதிர்ஷ்டத்தினாலா? அல்லது, பொதுமக்கள் முன்னிலையில் ஒன்றைக்கூறி முதுகின் பின்னால் வேறொன்றைச் செய்யும் அரசியல் வாதிகளின் கபடத்தனத்தினாலா? அப்படி அல்லாதுவிடின், அதிகார ஆசையால் உருவான அரசியல் அபிலாஷை காரணமாகவா? எதுவாக இருந்தபோதிலும், பொதுமக்களது சமாதானம் தொடர்பான எதிர்பார்ப்புக்குப் பங்கம் ஏற்படுமானால் அதற்கு நேரடியான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் சகல அரசியல்வாதிகளுமே.

சமாதானத்துக்கான தேவை இப் போர்நிறுத்த உடன்பாட்டின்மூலம் பலம் பெற்றுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் அதிகாரம் பெறும் நோக்கில் சமாதானத்தை அடகுவைத்து பொது மக்களை மீண்டும் சிக்கல்களுக்கு உள்ளாக்கத் தயாராயுள்ள ஏமாற்றுப் பேர்வழிகளைத் தவிர வேறு எவரா

**தமிழில்: வீயெஸ்ரீ**

வது பிரதமரின் இப்பேச்சு பொய்யானது எனக் கூற இயலுமா? போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டபின்னர் நிரந்தர சமாதானத்துக்கான தேவையை விடுத்து, சமாதானம் தேவையில்லை யுத்தமே வேண்டும் எனக் கூறும் எவராவது உள்ளனரா? யுத்தம் இடம்பெற்ற சமயம், போர்முனைக்குச்சென்று போரிட்டோரில், தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் குறித்து விமர்சிப்போரின் கிட்டிய உறவினர் எவராவது உள்ளனரா? நிச்சயமாக அவ்விதம் எவரும் இல்லை. அவர்களெல்லாம் கிராமப்புறத்து வறிய இளைஞர்களும் யுவதிகளுமே ஆவர். பல சந்தர்ப்பங்களில் போர் முனையில் கொல்லப்பட்ட சில இளைஞர், யுவதிகளின் சடலங்களுக்கு அவர்களது வீடுகளில் இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்படக்கூடிய அளவுக்குக் கூட இடவசதி இருக்கவில்லையென நாம் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறோம் அல்லவா? அவ்வகை துரதிர்ஷ்ட நிகழ்வுகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.ஆனால், அது தற்காலிகமானதே. நிரந்தர சமாதானம் எட்டப்படாதவரையில் அது தற்காலிகமானதே. ஆனால், மீண்டும் அவ்வகையான துரதிர்ஷ்ட நிகழ்வுகள் இடம்பெறாதிருக்கவேண்டுமானால், அது நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதால் மட்டுமே இயலும். உண்மையில் யுத்தத்தை உருவாக்கியவர்கள் அரசியல்வாதிகளேயன்றி சாதாரண பொதுமக்கள் அல்லர். எனவே, சகல அரசியல வாதிகளும் ஒன்று சேர்ந்து நிரந்தர சமாதானத்தை இந்நாட்டில் உருவாக்க முயலவேண்டும். பொ.ஐ.முன்னணியும், ஐ.தே.முன்னணியும் சமாதானத்தை உருவாக்கும் விடயத்தில் அவரவர் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளே அவர்கள் இரு தரப்புக்கும் இடையேயான வேறுபாடுகளுக்கான காரணமென பிரதமர் தெரிவித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.சமாதானமே முக்கிய குறிக்கோளாகும் ஜாதி, மதம், குல கோத்திரம் ஆகிய சகல பேதங்களையும் புறந்தள்ளி, நாட்டின் சகல பொது மக்களின் தேவை சமாதானமே. இது அவர்களது இன்றைய எதிர்பார்ப்பு ஆகும். இன்று வாழ்ந்துகொண்டிருப்போருக்காக மட்டுமல்ல, எதிர்காலச் சந்ததியினருக்குமான தேவை சமாதானமே. ஆதலால், சமாதானத்தை அடையும் நோக்கில் மேற்கூறிய இரு பிரதான அரசியல் கட்சிகளும், தாம் கடைப்பிடிப்பதாகக் கூறும் வெவ்வேறுவித அணுகுமுறைகளில் மாற்றங்கள் மேற்கொள்வதன்மூலம் எதிர்பார்க்கும் சமாதான இலக்கை தமது வேலைத்திட்டங்களைத் தயாரித்து முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் இவ்விரு தரப்பினரும் திறமையுடன் செயற்படவேண்டும். இவர்களில் ஒரு தரப்பினர் இச் சமாதானமுயற்சிகளை ஆரம்பித்து வைத்தவர்கள் ஆவர். மறு தரப்பினரோ அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்பவர்கள். இவ்விரு தரப்பினர்களதும் கடைசிக் குறிக்கோள் ஒன்றேயாகும்.



அது வேறெதுவுமல்ல, சமாதானத்தை எட்டுவதென்ற இலக்கேயாகும் ஆகவே, கடந்துசென்ற பாதைக்கு மீண்டும் திரும்பி விடாத வகையில், சீதூக்கி ஆராய்ந்து முடிவெடுக்கும் விதத்தில், தொடர்ச்சியாக மாறிமாறி நாட்டை ஆட்சிசெய்த இவ்விரு தரப்பினரும் திறமையுடன் செயலாற்றல் அவசியமாகும் பிரிந்துபோவதைவிட வேறு மார்க்கம் எதுவும் இல்லை எனக் கூறிவந்த தரப்பினர், இன்று சமாதானப் பாதையில் காலடி வைத்துள்ள நிலையில், நாடு துண்டாடப்படுவதற்கு எதிரான தரப்பினர், இச்சமாதானத் தேடலில் இணையப் பின்வாங்குவார்களேயானால், அது அரசியல் வஞ்சகத்தனம் ஆகும் பொது மக்களுக்கு இழைக்கும் துரோகமுமாகும். ★




**சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக செயலாளர் சி.கேசவராஜன் 'பல்லுக்கழுவும் இயந்திரம்' (ஸ்கேலர்) ஒன்றினை வழங்குவதையும், அதனை சங்கானை மாவட்ட வைத்திய அதிகாரி பெற்றுக்கொள்வதனையும் படத்தில் காணலாம். (எ-185)**

## மாநகரசபைப் பிரிவில்
# வளர்ப்பு நாய்களுக்கு இன்றுமுதல் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்ப்பாணம் மாநகரசபை பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் திகதிகள் குறித்து யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

தினமும் காலை 8 மணிமுதல் 12.30 மணிவரையும், பிற்பகல் 2 மணி முதல் 5 மணிவரையும் தடுப்பூசி ஏற றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

இன்று செவ்வாய்க்கிழமை கண்டுக்குளியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், நாளை புதன்கிழமை நல்லூர் (செட்டிதெரு) முருகன் சனசமூக நிலையத்திலும், 10ஆம் திகதி வியாழக்கிழமை குருநகர சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும். (எ)

### மருந்தகங்களுக்கு அபராதம்

காலாவதியான மருந்துகளை விற்பனைக்கு வைத்திருந்ததாக சங்கானை பட்டினப் பகுதியிலுள்ள இரு மருந்தகங்களின் உரிமையாளர்கள்மீது குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் மேற்படி மருந்தகங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் -

இனி இவ்வாறு செய்யக்கூடாதென நீதிவான் எச்சரிக்கை விடுத்ததாகவும் - மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.(ஒ-135)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.8

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் அமரர் செ.சண்முகரத்தினம் 2 ஆம் ஆண்டு ஞாபகார்த்தக் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 8 மணி - சிறுப்பிட்டி கலை ஒளி வி.க.எதிர் இமையாணன் மத்திய வி.க. இதில் வெற்றி பெறும் கழகம் வண்ணார்பண்ணை வள்ளுவன் வி.கழகத்துடன் மோதும்.

இரவு 7 மணி தொண்டமனாறு விவேகானந்த வி.க.எதிர் சமரபாகு நியூட்டன் வி.க. இதில் வெற்றி பெறும் கழகம் உடுப்பிட்டி சிவகுமாரன் வி.கழகத்துடன் மோதும். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4 மணி-பாடும் மீன்வி.க. எதிர் ஆனைக்கோட்டை யூனியன்வி.க.

பிற்பகல் 5.15 மணி - பாடும் மீன் வி.க.எதிர் சென்மேரிஸ் வி.க. (ஒ.5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.8

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.(ஒ-86)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஏப்.8

பனிப்புலம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டையொட்டி மரதன் ஓட்டம், கிளித்தட்டு ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளதாகக் கழகத் தலைவர் தரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஒ-135)

# சீடராகப் பணிவோம்!

வேகமாக முன்னேறிவரும் இன்றைய கணனி யுகத்திலே குடும்பமட்டத்திலும் சரி, நிர்வாக நிலைகளிலும் சரி, சமுதாய அளவிலும் சரி ஆன்மீகப் பற்றும், இறை பயமும், கடமைப் பணிவும் அருகிவருகிறது. உலகியல் மேலாதிக்கத்திற்கும் மனித அச்சுறுத்

**துவக்காலச்சிந்தனை**
**-35ஆம் நாள்-**

தலுக்கும் சுயநல எதிர்பார்ப்புகளுக்கும் அடிபணிந்து, மனிதத்தை மதித்து வாழ்ந்துவருகிறோம். இதனால் தலைமைத்துவ உள்ளுணர்வும், இறுமாப்பும் எம்மில் வளர்கின்றன. மனச்சாட்சி தன்நியமப்படி செயலாற்ற தடை போடுகிறோம். எதிலும் எம்மை முதன்மைப்படுத்துவதில் குறியாக இருக்கிறோம்.

எல்லோரும் தலைவராகவும், பெரியவராகவும் முன்னிருக்கைகளில் வசதி வாய்ப்புக்களுடன் வாழ முற்பட்டால் பணியாளனாக, சீடனாக இருப்பது யார்? இக்கேள்விக்கு இயேசுவின் வாழ்வும், வார்த்தையும், உயிர்த்தியாகமும் தகுந்த சாட்டை அடியாக அமைகின்றன. 'விண்ணகத்தில் பெரியவனாக இருக்கவிரும்புபவன் இவ்வுலகில் பணியாளனாய் சேவை புரியட்டும்' என எடுத்துரைக்கிறார்.

இயேசு மேலானவராக இருந்தும் தாழ்நிலை தரித்து பாமரரோடு உண்டு, உறவாடி, பணிபுரிந்து 'சீடத்துவத்தின் சிறப்பை உணர்த்தி மகிமை அடைந்தார். தன் வழி தொடர எமக்கும் அழைப்புவிடுக்கிறார்.

எக்கோணத்தில் நோக்கினும் இறை வார்த்தை மனிதனை ஆற்றுப்படுத்தி செம்மையான பாதையில் இட்டுச்செல்

**எஸ். யேசுதாஸ்**

லும் நல் வழிகாட்டியாகவே விளங்குகிறது. 'சீடத்துவம்' என்பது அடிமை நிலை என்ற கருத்தல்ல. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அன்பிற்கும், பிறர் நலத்திற்கும் அர்ப்பணித்து எமது கடமைகளை உணர்ந்து வாழ்வதாகும்.

எனவே, நேர்மை என்னும் தலைவனுக்கு பொறுப்புள்ள நற்சீடனாக எமது தினசரி செயற்பாடுகளில் ஈடுபடுவோம். வணங்காக் கழுத்துள்ளவனாக வாழாது, பணிவைக் கைக்கொள்வோம். எம்மைப்போலவே ஏனையோருக்கும் அறிவு, ஆற்றல், திறமை, ஆளுமை என்பன வெவ்வேறு துறைகளில் உண்டு என்பதை ஏற்றுக்கொள்வோம். இவ்வுலகில் சீடராவோம்.மேலுலகில் மேன்மையடைவோம். ★

# நெல் அமோக விளைச்சல் சந்தைப்படுத்த வசதி இல்லை!
## பூநகரி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, பூநகரி பகுதிகளைச சேர்ந்த கறுக்காத்தீவு, பூநகரி, செல்லைதீவு, ஞானிமடம், சித்தங்குறிச்சி, நல்லூர், முழங்காவில்நாகபடுவான் ஆகிய பகுதிகளில் இம்முறை அமோக நெல் விளைச்சல் கிடைத்துள்ளது என்றும், எனினும் அவற்றை சநதைப்படுத்தமுடியாதநிலையில் விவசாயிகள் திண்டாடுவதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சி, பூநகரி ப.நோ.கூ. சங்கங்கள் தம்மிடம் போதிய நிதி வசதியில்லையென தெரிவித்து நெல்லைக் கொள்வனவு செய்யமறுத்து விட்டன எனவும் - கூறப்பட்டது.

இதேவேளை, யாழ்மாவட்ட அபிவிருத்தி நலன் உரிமைபேணும் சங்கத தலைவர் என்.பத்மநாதன் இது சம்பந்தமாக இவ்விரு ப.நோ.கூ. சங்கங்களுக்கும் நிதி உதவிசெய்யுமாறு புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவையும், கூட்டுறவு அமைச்சரையும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சரையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

மேற்படி அமைச்சர்களுடன் இது குறித்து நேரில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-36)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சுசிலலிங்கம் (J.P.), ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

## புற்றுநோயாளர் கவனத்துக்கு

சண்டிலிப்பாய், ஏப்.8

லண்டனிலுள்ள சிவயோகம் அறக்கட்டளையினரால் வருடம் தோறும் வழங்கப்பட்டு வரும் 'சிவயோகம் புற்று நோயாளர் கருணை நிதியக் கொடுப்பனவு' இவ்வருடமும் (2003) வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று லட்சத்து ஏழாயிரம்ரூபா நிதி இதற்கென கிடைத்துள்ளது. உச்ச வறுமைக்குட்பட்ட உதவி தேவைப்படும் புற்றுநோயாளர்கள் யாழ். அரசினர் வைத்தியசாலையில் வழங்கப்படும் இதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று மருத்துவரின் சிபார்சுடன் இந்த நிதி உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

நிதியத்தின் சார்பில் ஆசிரியர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், கண் வைத்திய நிபுணர் டாக்டர் ச.குகதாசன் ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர். (எ-135)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு!

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது இதில் பங்கேற்குமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ)

## மரதன் ஓட்டப்போட்டி

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

கொழும்பு சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் அனுசரணையோடு நடைபெறவுள்ள இப்போட்டி எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி காலை 7 மணிக்கு கொழும்பு காலி முகத்திடலில் இருந்து ஆரம்பமாகி பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலய வளவில் முடிவடையவுள்ளது. (எ-8)


**விநியோக வான் தேவை**

யாழ்-குடாநாட்டிற்குள் பொருள்களை விநியோகிப்பதற்கு ஏற்றதான வான் தேவை.

தொடர்பு:
இல.357,
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம். (16508)

**A/L - 2003**

பரீட்சைக் கால நூல்!
அளவையியலும் விஞ்ஞான முறையும்
பகுதி II (பின்னிணைப்பு)
எஸ்.எஸ்.மனோகரன்

★ 2001, 2002 வினா - விடைகள்
★ குறும் வினா - விடைகள்
★ புதிய விடயங்கள்

விலை 75/-

கிடைக்குமிடம்:
BEACON - யாழ்நகர்
(வெலிங்டன் சந்தி) (16471)

**மது கல்வி நிறுவனம்**
டச்சு வீதி, இருபாலை,
கோப்பாய்

O/L DAY CLASS

ஆரம்பம்: 09.04.2003
எமது வழமையான ஆசிரியர்கள்.

(16497) நிர்வாகி.


# சூழல் மாசடைவதைத் தடுக்காவிடில் எதிர்காலம் சூனியமாகும் அபாயம்

**சர்வதேச சுகாதார தினம் நேற்றாகும் அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

இவ்வருட சர்வதேச சுகாதார தினத்தின் கருப்பொருளாக "சிறார்களின் சூழல் சுகாதாரமும்-அவர்களுடைய எதிர்கால வாழ்வினை வளப்படுத்தலும்" என உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தியிருந்தது.

மக்களின் சுகாதார மேம்பாட்டில் சூழல் மாசடைதல் எவ்வளவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை இது உணர்த்துகிறது.

எதிர்காலத்தில் பூமியில் மனித சஞ்சாரத்திற்கு சவாலாக அமையப் போகும் சூழல் மாசடைதல் இன்று அரசியல், பொருளாதார, சமூக களங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பூமியில் தொடர்ந்தும் உயிரினங்கள் வாழவேண்டுமானால் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு தகுந்த பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தை இன்று அனைத்து நாடுகளும் உணரத் தொடங்கியுள்ளன. அதிலும் வளிமண்டலம் மாசடைவதே பெரும் பாதிப்பாகும்.

வளிமண்டலம் ஒரு சிக்கலான தொகுதியாகும். வளி மண்டலத்தின் ஆக்கக் கூறுகளாக பல வாயுக்கள் காணப்படுகின்றன.

பொதுவாக நைற்றஜின், ஒக்ஸிஜின், காபனீரொக்சைட் ஐதரசன், ஹீலியம் போன்றவைகளும் சிறிய அளவில் அமோனியா, சல்பர் ஒக்சைற், காபன் மொனொக்சைற் போன்றவைகளும் காணப்படும்.

பல காரணங்களால் - இம் மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களால் மனிதனுக்கும் மற்றும் தாவர விலங்கினங்களுக்கும் தீங்கு ஏற்படும் தோற்றப்பாடு வளிமாசடைதல் எனப்படும்.

வளிமண்டலம் மாசடைவதற்கு, அதிகரித்துவரும் உலகச் சனத்தொகையும் அதனுடன் தொடர்பான தொழிற்சாலை மயமாக்கல், வீடமைப்பு குடியேற்றத்திட்டங்கள, அதிகரித்து வரும் போக்குவரத்து சாதனங்கள் போன்றவை முக்கிய காரணங்களாக அமைகின்றன.

### வளிமண்டலம் மாசடைவதால் -

★பூமியின் வெப்பநிலை அதிகரித்தலும், அதன்காரணமாக உலக காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுதலும்.

★மனிதனில் பல உடல்நல தீங்குகள் ஏற்படுதல்.

★தாவரங்களில் நேரடிப் பாதிப்பு ஏற்படுதல்.

வளிமண்டலம் மாசடைவதனால் ஏற்படும் அமில மழை காரணமாக உயிரினங்கள், கட்டடங்கள் பாதிப்படைதல்.

★வளி மாசடைவதனால் உண்டாகும் காரணிகள் மழை மூலம் நீர் நிலைகளை அடைந்து நீர் மாசடைதல்.

ஆகிய தீமைகள் ஏற்படுகின்றன.

### பச்சசை வீட்டு விளைவு

சூரியனில் இருந்துவரும் சில கதிர்கள் பூமியின் மேற்பரப்பை அடைந்து, மேற்பரப்பை சூடாக்கி மீண்டும் அண்ட வெளிக்கே செலுத்தப்படுவதனால் பூமியின் வெப்ப சமநிலை பேணப்படுகின்றது. வளி மாசடைவதனை உருவாக்கும் சில வாயுகள் காரணமாக இக்கதிர்கள் மீண்டும் அண்டவெளியை அடைவது தடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக பூமியின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதுவே, 'பச்சை வீட்டு விளைவு' எனப்படும்.

பச்சைவீட்டு விளைவின் காரணமாக அடுத்த நூற்றாண்டில் பூமியின் வெப்பநிலை 1.5°c இலிருந்து 4.5°c வரை அதிகரிக்கலாமென விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இதனை ஏற்படுத்தும் வாயுகள் 'பச்சைவீட்டு வாயுக்கள்' எனப்படும். பொதுவாக காபனீரொகசைற், கிளோறோ புளோறோ காபன், மெதெயின் போன்ற வாயுக்கள் பச்சை வீட்டு வாயுக்களாகக் கருதப்படுகின்றன.

தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களின் செயற்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படும் எரிபொருள்களால் ஆண்டுதோறும் பெருமளவு காபனீரொக்சைற் வளிமண்டலத்தை அடைந்து வளி மாசடைதலை உருவாக்குகின்றது.

தாவரங்கள்,காடுகள் அழிக்கப்படுவதனாலும் காபனீரொக்சைற்றின் அளவு அதிகரிக்கின்றது. தவிர, குளிரூட்டிகளிலிருந்தும் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலத்தன் தயாரிக்கப்படும்போது வெளியேறும் குளோறோ புளோறோ காபன் என்ற வாயு, வளிமண்டலத்தை அடைந்து அதனை மாசடையச் செய்கின்றது. இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது குளோறோ புளோறோ காபன் சேர்வைகள். இவை வளி மண்டலத்தில் விடப்படும்போது, அவை விரைவாக ஓசோன் படலத்தைச் சேதப்படுத்துகின்றன. இயற்கையாகவே, பூமியின் வளிமண்டலத்தில் ஓசோன் என்னும் வாயுப்படலம் காணப்படுகின்றது. இப்படலமானது சூரியனிலிருந்து வெளிபடும் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களை அகத்துறிஞ்சும் தன்மைகொண்டவை. ஊதா கடந்த கதிர்கள் பூமியை அடையுமாயின், மனிதரிலும், தாவரங்களிலும் பல விதமான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

அவையாவன: கண்கள் பாதிப்படைதல், தோல் எரிவு மற்றும் தோல் புற்றுநோய் ஏற்படல், தாவரங்களின் வளர்ச்சி பாதிப்படைந்து விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைதல், கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு கடலுணவு உற்பத்தி பாதிப்படைதல், மனிதனில் நோய் ஏற்படாது தடுக்க உதவும் நீர்ப் பீடணத் தொகுதியின் தொழிற்பாடு பாதிப்படைவதால் நோயால் பீடிப்புறும் தன்மை அதிகரித்தல் ஆகும்.

இவ்வாறான ஓசோன் படலச் சிதைவு பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதனால், ஓசோன் படலத்தைப் பாதுகாக்க பலவிதமான சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உலகநாடுகள் எடுத்து வருகின்றன. இதில் குளோறோ புளோறோவின் பாவனையைத் தடை செய்து, அதற்கு மாற்றீடான இரசாயனப் பொருளை உருவாக்கலும் அடங்கும்.

### தீங்குகள்

காபன்மொனொக்சைற் எரிபொருளகளின் குறை தகனம், புகைப்பிடித்தல் காரணமாக வெளியேறும் வாயுவாகும். இதனால் தலையிடி தலைச்சீற்று, சோர்வு, வாந்தி போன்ற உடல்நலக் குறைபாடுகள் ஏற்படும். இதன் அளவு அதிகரிக்கும்போது சுயநினைவு இழத்தல், இறப்பு என்பனவும் ஏற்படலாம்.

நைற்றிஜன் ஒக்சைற் - தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளியேறும் வாயுவாகும். இதனால் மூக்கு, தொண்டை அருட்டப்படுதல், இருமல், தலைவலி, சுவாசத்தொகுதி பாதிப்படைதல் போன்ற உடல்நலக் குறைகள் ஏற்படலாம்.

சல்பர் ஒக்சைற் - அனல் மின் நிலையங்களின் செயற்பாடுகளினால் வெளியாகும் வாயு இதுவாகும். இவ்வாயு அமிலமழையை ஏற்படுத்துவதனால் கண் எரிவு, தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதுடன் புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்புண்டு. மேலும் இந்த அமிலமழையானது கடலுடன் சங்கமமாகும்போது கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்பை அடைகின்றன.

வளிமண்டலம் மாசடைவதைத் தவிர்க்க நாம் என்ன செய்யலாம்?

எரிபொருள்களுக்கு மாற்றீடாக இதர வளங்களை அறிமுகப்படுத்தல்.

தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் மாசாக்கிகள் வளி மண்டலத்தை அடையாமல் தடுத்தல் அல்லது வெளியேற்றப்படும் அளவைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

சூழல் பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்தி, அதற்கமைவாக தொழிற்சாலைகள், வாகனங்கள் ஆகியவற்றை செயற்பட வழி வகுத்தல்.

சுகநலக் கல்வி மூலம் வளிமாசடைதலின் தீய விளைவுகளை மக்களுக்கு உணர்த்தல்.

மனிதன் சூழலின் ஆக்கக் கூறாக அமைவதனால் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் தனிமனிதனுடைய பங்கு தவிர்க்க முடியாத தொன்றாகின்றது. எனவே குடும்ப, சமூக, மாகாண, தேசிய மட்டங்களில் சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல் மாசடைவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் உணர்த்தப்பட்டு, உகந்த தீர்வுகள் முன்வைக்கப்பட்டு சூழல் சுகாதாரத்தினை மேம்பாடு அடையசசெய்தல் அவசியமாகின்றது. ★


து.மகாதேவன்
சுகாதார பரிசோதகர்,
யாழ்.மாநகரசபை



**இதோ!**

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர்த்துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்குப் பாவியுங்கள்!

✻ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS
PUTTALAM ROAD,
(REG. NO: 6382) AR/PR/NO 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 2567

(C-சு/204)


# நினைவஞ்சலி

13 ஆவது வருட | 31ஆவது நாள்



**இளையதம்பி விஜயகுமார்**
(உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க ஊழியர்)



**விஜயகுமார் சசிகரன் (தம்பி)**
(உடு.அமி.கல்லூரி. 11 ஆம் ஆண்டு மாணவன்)

30.10.1957 ⟷ தோற்றம் ⟷ 26.05.1986

05.07.1990 ⟷ மறைவு ⟷ 10.03.2003

நெஞ்சங்கள் குலங்குகின்றன கண்கள் பனிக்கின்றன
ஆறாத் துயரில் விம்மி விம்மி அழுதும்
ஆறுதல் கிடைக்காமல் சொந்தங்கள் தவிக்கின்றன
மாதங்கள் என்ன வருடங்கள் சென்றாலும் மாறிடுமோ இச்சோகம்!

வீரபத்திர கோவில் தெற்கு,
உடுப்பிட்டி. (16507)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## லூக் மனானந்தன் செல்லத்தம்பு

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட லூக் மனானந்தன் செல்லத்தம்பு அவர்கள் 03-04-2003 வியாழக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி யோன் மனுவல் செல்லத்தம்புவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேதநாயகம் செல்லத்துரையின் மருமகனும் திருமதி யோசப்பின் செல்வமலரின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் இன்று (08.04.2003) செவ்வாய்க் கிழமை இடம்பெறும் அதேவேளை, கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா ஆலயத்தில் இன்று மாலை 6.00 மணிக்கு (புதிய நேரம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்.* (16496)

தகவல்:
மைத்துனர், உறவினர்கள்.

## பொன்னம்பலம் நந்தகுமார் (நந்தன்)

கொக்குவில் மேற்கு, பூநாறிமரத்தடியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் தற்போது வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோயிலடி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் நந்தகுமார் 06.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பூபதி தம்பதியினரின் அன்பு மகனும் வண்ணமுத்து - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் சாந்தியின் அன்புக் கணவரும் கிருஷ்ணகுமார் (சங்கானை), குணரட்ணம் (குணம் - திருமலை), தேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச சகோதரரும் தேவா, ராஜன், குணா, தனம், சித்திரா, உமா, சாலா, சச்சு, தங்கராசா (வவுனியா), சரோஜாதேவி (சங்கானை), குமுதினி (திருமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் தற்போதைய வதிவிடத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோவிலடி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்,* (16500)

தகவல்:
வ.தவராஜா (தேவா)
(மைத்துனர்)

# ராஜ ரவிவர்மா: இருமைக் காட்சி வாதமும் காண்பிய அர்த்தமும்...

## 'ரவிவர்மா' ஓவியக் காட்சி

**யாழ்ப்பாணத்தவரின் பாரம்பரிய காண்பிய கலாசாரம் தற்போது அழிந்து கொண்டு வருகின்றமையை உணர்ந்து அதனை அழிவிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் 'முதுசம' ஆரோக்கியமாகச் செயற்பட்டு வருகின்றது.**

**யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் 'முதுசம்' IX இல் 'ரவிவர்மா' என்னும் ஆரம்பகாலப் பதிப்புப் படங்களின் கண்காட்சி கடந்த 5 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்று இந்தக் கண்காட்சி இறுதிநாளாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

**முதுசம் எமது பாரம்பரியத்தின் கலாசார சின்னங்களைத் தேடும் பணியிலும் அவற்றைப் பாதுகாத்தல், ஆவணப்படுத்தல் முயற்சிகளிலும் தன்னை அர்ப்பணிக்கும் - இது எமது இனத்தின் அடையாளத்தை தேடும் பணியாகவும் அமைந்துள்ளதை இன்னொரு வடிவிலான போராட்டமாகவே ஒன்றிலிருந்து ஒன்பதாக நகர்த்தியுள்ளது.**

★

சமகால யாழ்ப்பாணத்தின் காண்பியக் கலாசாரம் பற்றிய புரிந்து கொள்ளலிலும் அது பற்றிய கருத்தாடல்களின் பொருத்தப்பாடுகளைத் தீர்மானிப்பதிலும் இன்று, இப்பிராந்தியத்தின் சனரஞ்சகக் (popular) காட்சி வெளிப்பாடுகள் தவிர்க்க முடியாதவை ஆகியுள்ளன. மறுதலையாக யாழ்ப்பாணத்தில் ஓவியம் என்பதன் அர்த்தப்பாட்டில்தான் அதன் கலை வரலாறும், சமகால வெளிப்பாடுகளின் தன்மைகளும் தங்கியுள்ளன எனலாம். இந்த அர்த்தப்பாட்டைக் கட்டியமைப்பதில் காலனியக் கல்வி முறையும், வாழ்க்கை முறை



யும் பிரதானமானவை. எனினும், அது வலுவாக்கப்பட்டதும், பரப்பப்பட்டதும் சம்மவருள் செரிக்கப்பட்டதும், 'ரவிவர்மா ஓவியங்கள்' என்று பொதுவாக அழைக்கப்படும் ஆரம்பகால ஓலோ கிராப் (oleographs) அச்சுப்படங்களால் தான் எனலாம்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஓவியம்,

**நா.சனாதனன்**

மதம், அழகு(மனிதர்கள், கலை பற்றிய) கருத்துநிலையை இவை கட்டியமைத்தன. இன்றைய சிவகாசி அச்சுப் படங்கள், இதர சாமிப்படங்கள், வெளிப் பொம்மைகள், விளம்பரப் படங்கள், கோயில் சுவர்ப் படங்கள், கலண்டர்கள், மோட்டார் வாகனங்களில் வரையப்பட்டுள்ள படங்கள், புத்தக அட்டைப் படங்கள், விளக்குப் படங்கள், பட்டாசு, தீப்பெட்டி, சந்தனக்குச்சி போன்றவற்றின் மேலுறைகள், போராளிகளின் மெய்யுருக்கள் என அனைத்திலும் உள்ள படங்களின காட்சிப் பண்பும், தொடர்பாடல் நுட்பமும் இந்த அச்சுப் படங்களினூடு வடிவமைக்கப்பட்டவை.

இன்று எமது ஓவிய ஆசிரியர்கள் எதிர்பார்ப்பதும் மாணவர்கள் முயன்று பார்ப்பதும் இந்த அச்சுப் படங்களைப் போலச் செய்வதைத் தான் என்ற வகையில் இவை இன்றைய காண்பியக் கலாசாரத்தின் அளவீடுகளாகவும் மாறியுள்ளன.

### அச்சுப்படம்

கிறிஸ்தவ மிஷனரிகளால் அறிமுகம் செய்யப்பட்ட அச்சுப்பதிப்புத் தொழில்நுட்பமானது, இந்திய துணைக்கண்டத்தில் தகவல் தொழில் நுட்பம் என்ற நிலையில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொணர்ந்தது.

1870களில் இருந்து ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட லிதோகிராபிக் பிரதிகள் இந்தியாவினுள் பெருக்கெடுத்தன. 1885 இல் தான் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ளூர் ஓலோகிராப் அச்சுக்கூடங்கள் காளான்களாக முளைத்தன. இந்தத் தொழில் நுட்பத்தின் சாத்தியப்பாடுகளால் பொதுமக்களின் நாளாந்த வாழ்வைத் தொற்றிக் கொண்டவர் ராஜா ரவிவர்மா. உயர்தரமான பிரதியெடுப்பு நுட்பத்தினாலும், மத சம்பந்தமான பாத்திரங்களின் முட்பரிமாண மாயத்தினாலும் முழு அச்சுப் பண்பாட்டினையும் மாற்றம் காணச்செய்தார் இவர்.

இயந்திரபூர்வமான நகல் எடுப்பானது மரபு வழியான அனைத்துக் கலைகளின் மீள் உருவாக்கத்தை ஊக்குவித்து. மீள் உருவாக்கல் தொழில் நுட்பம் மீள் உருவாக்கப்பட்ட பொருளை மரபின் பிடியிலிருந்து விடுவித்தது. ஆரம்ப காலங்களில் கொல்லர்கள் ஈடுபட்ட இத்தொழிலில், நகர ஓவியக் கல்லூரிகளில் கல்வி கற்றவர்களும், பின்னர் ரவிவர்மா போன்ற மேட்டுக்குடி சார்ந்து கொண்டாடப்பட்ட படைப்பாளிகளும இணைந்து கொண்டார்கள். இதனால் படைப்புக்கள் நுகர்வோர் நிலையில் உயர்ந்த, தாழ்ந்த மேட்டுக்குடிசார், சாமானியர்கள் சார்ந்த என்ற பிரிப்புக்களைத் தாண்டி அது நுகர்வை அனைவருக்குமுரியதாக்கியது.

இதுவரை இருந்த படைப்பின் ஒற்றை இருப்பு, இதனால் உருவாக்கப்பட்ட தற்புதுமை **(Originality)** அபூர்வம் **(aura)** என்பதைப், பல வகைப் பிரதியெடுப்புக்கள் இல்லாதொழித்தன. அத்துடன், நுகர்வோனை அவனது சூழலிலேயே எதிர்கொள்ளலையும் சாத்தியமாக்கியது. இதுவரை கோயில்களிலும் யாத்திரைத் தலங்களிலும் வீடுகளிலும் இருந்த புனித விக்கிரகங்களாக கொள்ளப்பட்ட உருவங்கள் மிகப் பெரிய அளவில் விற்பனைப் பண்டங்களாக மாற்றம் கண்டன. இதனூடு அச்சுப்படங்கள் சந்தைப் பொருளாதாரத்தினதும், வைத்தகத்தினதும், புனிதத்தினதும் மேன்மையான சேர்மானங்களாயின. இதனூடு யதார்த்தம் என்பது மக்கள் திரளுக்கும் (Mass), மக்கள் திரள் என்பது யதார்த்தத்திற்கும் மாற்றம் கண்டது. இந்தத் தொடர் மாற்றம் எண்ணற்ற சாத்தியப்பாடுகளைத் திறந்துவிட்டது.

கேரளாவில் திருவனந்தபுர சமஸ்தானத்தைச் சேர்ந்த ராஜா ரவிவர்மா (1848-1906) அன்றைய சனரஞ்சக பக்தி இயக்கத்தினதும், தென்னிந்திய சனரஞ்சக காட்சி முறையுமான தஞ்சாவூர் பாணி ஓவியங்களில் தான் பெற்று வந்த பயிற்சியைக் கைவிட்டு மெய்ப்பண்பியல்பான எண்ணெய் ஓவியங்களை வரைய முயன்றார். மேற்கத்தேய அச்சுப் படங்களை அடிப்படையாகக் கொண்டு சுயமாகவே இதைக் கற்றும் கொண்டார். இதனால் இந்தியா விற்குப் புதியதும் குறியீட்டுப் பண்பற்றதுமான உறைந்த காட்சிப்படுத்தலையும் மேற்கத்தேய இயற்பண்பையும் ஒட்டி இந்துக் கடவுள்களினதும், இதிகாச பாத்திரங்களினதும், இன்றைய விக்கிர உடலை உருவாக்கினார்.

ரவிவர்மாவின் இந்த மேலைத்தேய, கீழைத்தேய கலப்பு, இருமைக்காட்சி வாதமும், அது காலனிய மேட்டுக் குடியினரிடமும், இந்திய தேசியவாதிகளிடமும் ஒரே வேளையில் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் அன்றைய சமூக வரலாற்றுப் பின்னணியில் புரிந்துகொள்ளமுடியும். கேரளாவில் முதலில் நிகழ்ந்த சமஸ்கிருத மயமாதல், கல்வியறிவு பெற்ற நடுத்தர வர்க்கத்தின் மேற்கிளம்புகை, இந்து இதிகாச புராணங்களின் ஆங்கிலப் பெயர்ப்பு, இந்துமதத்தின் மறுசீரமைப்பு மத அனுஷ்டானங்கள் தனிமனித தனக்கு அந்தரங்கமாதல், தேசிய வாதத்தின் எழுச்சியும் மரபுபற்றிய புதிய வியாக்கியானங்களும், உள்ளூர் சமஸ்தானங்களினதும், கலைப்பட்டறைகளினதும் வீழ்ச்சி, கலைப்போஷிப்பு தளத்தில் நிகழ்ந்த மாற்றம் என சிக்கலானதும் பல வழிப்பட்டதுமான மாற்றங்களின் கண்ணாடியாக இந்த ஓவியங்கள் அமைந்தன.

கதகளி, கேரள சுவரோவியங்கள் என மரபுக்கலையில் தாடனமான ரவிவர்மா, தனது புராண இதிகாச சித்திரிப்புக்களுக்கும் பாத்திரங்களின் நடை, உடை பாவனைக்கும் அக்காலத்தின் பிரபல்யமான பார்சி அரங்கை மாதிரியாகக் கொண்டார். இவ்வரங்க வடிவம் காலனிய மெய்ப்பண்புப்புனைவு சார்ந்தது. இந்த அரங்கில் காட்சிக்கேற்ப பின்னணியில் படம் வரையப்பட்ட தட்டிகள் அல்லது திரைகள் தொங்கவிடப்படும். நடிகர்கள் இதன் முன்னே நடித்தார்கள். இதை அடிப்படையாகக் கொண்ட ரவிவர்மாவின் காட்சிப் படுத்தலில் பின்னணிக்கும், முன்னணிக்குமான தொடர்ச்சி வெட்டப்பட்டு, ஒளி நிழல்படுத்தல், உடல நிலைகள், முகப்பாவனைகள் என எல்லாவற்றிலும் ஒருவகை நாடகத் தனமும் மென்னுணர்வுத் தனமும் காணப்படுகின்றன.

இந்த உருவங்கள் புஷ்டியான உடல்வாகுடனும், வெளிர் மஞ்சள நிறத்திலும் சேலை போர்த்திய மேலைத்தேய உருவங்களாக அமைந்தன. இவை பிராந்திய இன சாதிய அடையாளங்களற்ற ஒரு பொது இந்திய, இந்து அடையாளமாகவும் தேசிய சுதேசிய முரண்பாட்டால் வடிவமைக்கப்பட்ட இலட்சிய உடல்களாகவும் எல் லோரும் இருக்க ஆசைப்படுகின்ற வடிவங்களாகவும் திகழ்ந்தன.

இதுவரை இந்திய கலை வரலாற்றில் அரிதான தனி மனித படைப்பாளியின் முக்கியத்துவம் என்பது ரவிவர்மாவுடனேயே துலக்கமாகின்றது. ஆரம்பத்தில் சீரிய கலைக்குரிய பண்புகளுடனும் மேட்டுக்குடி அபிலாஷைகளுடனும் தொடங்கிய ரவிவர்மாவின் கலைப் பயணம் ஓலோகிராப் அச்சுத் தொழில்நுட்ப அறிமுகத்துடன் சனரஞ்சகக் கலைக்குள் புகுந்து துயகப்படமாகவும் (பாடம்) கலண்டராகவும் பரிணமித்தது. 1894இல் ரவிவர்மாவின Fine Arts Lithography Press உருவாக்கப்பட்டது. தொடக்க காலங்களில் தனது எணணெய் வர்ண ஓவியங்களை ஓலோ கிராப் பிரதி



களாக உருவாக்கிய இவர், காலப் போக்கில் உற்பத்தியையும், சந்தையையும் முதல் நோக்காகக் கொண்ட வெளிக்கவர்ச்சியான அச்சுப் படங்களை நேரடியாக உருவாக்கினார்.

இதன் பிரசித்தம் தேசிய நினைவுகளில் இருந்து அவரின் 'தற்புதுமையான' மேட்டுக்குடியினருக்கான ஓவியங்களை மங்கலடையச் செய்தது எனலாம். இந்தப் பதிப்புகளில் கடினமான சுயமுயற்சியாலும் தேடலாலும் ஓவியத்தில் பெறப்பட்ட



கட்புல ஆழமும் (Visual depth) பாவமும், நேர்த்தியும் காணாமற் போயின. எண்ணெய் வர்ண ஓவியங்களின் நுகர்வோராக மேட்டுக்குடியினர் விளங்க 'ரவிவர்மா ஓவியங்கள்' என்ற பெயரில் அவருடைய கையெழுத்துடன் பதிப்புப் படங்கள் நடுத்தரவர்க்கத் திடம் பரவின. இதற்கிருந்த கிராக்கி நாளடைவில் போலிகள் உருவாக வழிவகுத்தது. இந்தப் போலிச்சந்தையால் ஏற்பட்ட நட்டத்தால் 1903இல் ரவிவர்மாவின் அச்சுக்கூடம் விற்கப்பட்டது. எனினும், அதற்குப் பின்னரும் ரவிவர்மாவின் கையெழுத்துப் போலிகளுடன் புதிய அச்சுப்படங்கள் வெளிவந்தன. இத்துடன், ரவிவர்மாவின் சனரஞ்சக பாணியை வாய்ப்பாடுகளாகக் கொண்ட பல படம் வரைவோரின் சந்தையும் விரிவடைகிறது எனலாம்.

ரவிவர்மா இந்தியப் பகடும் (Kitch) கலண்டரும் இந்திய நவீனத்துவத்தினதும், தேசியவாதத்தினதும் ஒத்த பதங்களாகவும் முதன் குறிப்பான்களாகவும் வைர்சியடைந்த காலப்பகுதியில் முக்கியம் பெற்றார். இந்தப் பதிப்புப் பிரதிகள் இலகுவாகவும், மலிவாகவும் பெரிய எண்ணிக்கையிலும், பலவகைகளிலும் கிடைத்தன. துணைக் கண்டத்தின் மூலை முடுக்குகளுக்கு புதிய புகையிரத சேவை இந்தப் படங்களை எடுத்துச் சென்றது. இவை மரபு பற்றிய, கலை பற்றிய புதிய சனரஞ்சகமான நம்பிக்கையை உருவாக்கின.

### யாழ்ப்பாணப் பண்பாட்டில் அச்சுப் படங்கள்

யாழ்ப்பாணத்து நாளாந்த வாழ்வில் இந்தப் பதிப்புபடங்களின் பிரசன்னம் என்பது காலனியத்தால் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றத்தால் அதிகரித்த பொருண்மைசார் பண்பாட்டின் குறிப்பான்கள் ஆகின்றன. ஆங்கிலம் படித்த, சமஸ்கிருதம் மயமான நடுத்தர வர்க்கத்தின் எழுச்சியும், சுதேச பண்பாட்டு அடையாளங்கள் பற்றிய மீள் வடிவமைப்பும், பர்மிய, சிங்கப்பூர் பொருளாதாரமும், வடமராட்சியின் கடல் வாணிப தொடர்புகளும், பண ஈட்டல்களும் யாழ்ப்பாணத்தில் கல்வீட்டுப் பண்பாட்டை உருவாக்கின. இதன் பகட்டிற்கும் படோபகரத்திற்கும் தேக்க மரங்களும் கூரை ஓடுகளும், தரைப்பளிங்குகளும், தாடாங்களும், சர விளக்குகளும் மட்டுமல்லாமல் இந்த ரவிவர்மாவினதும் அல்லது அவரை ஒத்த படைப்பாளிகளினதும் அச்சுப் படங்களும் எடுத்து வரப்பட்டன. இதற்கு போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களால் யாழ்ப்பாணம் இந்தியாவிற்கு மேலும் கிட்ட வந்ததும், யாத்திரைத் தொடர்புகளும் காரணமாகின.

இங்கு இதன் நுகர்வு என்பது தொடக்கத்தில் நிலவுடைமையாளர்களும், உயர் அரச உத்தியோகத்தர்களும், செல்வந்தவர்களும் சம்பந்தப்பட்ட தொன்றாக காணப்பட்டது. காலனித்துவ வாதத்தால் மறு உருவாக்கப்பட்ட அதிகாரம் பற்றிய சிந்தனையும் முக்கியமானது. இந்த வகையில், அதிகாரத்தினதும் சமூக அந்தஸ்தினதும் குறியீடாக இவை அமைந்தன. கட்டடங்களின் பொது வெளிகளான மடங்கள், கல்விக்கூடங்கள், கடைகள், வீட்டுக் கூடங்கள், விறாந்தைகள் என்பனவற்றையும் அந்தரங்கமான சாமிஅறைகள் போன்றவற்றிலும் இவை அலங்கார வழிபாட்டுத் தேவைகளுக்காகப் பயன்பட்டன. எனினும், இவற்றின் சூழலே இவற்றின் அர்த்தத்தைத் தீர்மானித்தன.

அத்துடன் நடுத்தர வர்க்கத்திற்கு உவப்பான முறையில் அன்பு, காதல், பெண்மை, ஆண்மை, வீரம், அழகு போன்ற அர்த்தங்களை இவை மீளமைத்தன. இந்த அடிப்படையில் நடுத்தரவர்க்கத்தின் கலை, மதம், அந்தஸ்து, அதிகாரம் பற்றிய மலிவான வெளிப்பாடுகளாகவும், நவீனத்தையும், மரபையும் கொண்டு இருமை அடையாளங்களாகவும் இவை அமைந்தன.

### ரவிவர்மா - ஆரம்பகாலப் பதிப் புப் படங்களின் காட்சி

இப்பிரதேச வீடுகளில் அவற்றின் முன்னைய செழிப்பின் எச்சங்களாக மிஞ்சியுள்ள அச்சுப் படங்களில் சேகரிக்க முடிந்தவற்றைக்கொண்டு இக்காட்சி அமைகிறது. இவை எல்லாம ரவி வர்மாவினுடையவை என்று நம்பப்பட்டாலும், மிகச் சிலதே அவருடையவை. சில அவரின் கையெழுத்துடன் உள்ள மற்றவர்களுடையவை. பல அவரின் காட்சி முறைமையையும் பாத்திர வாய்ப்புக்களையும் அடி ஒட்டிச் செய்யப்பட்ட மாறுதல்கள். சில அவ்வாறு வந்த கலண்டர் படங்களின் சட்டமிடப்பட்ட வடிவங்கள். சில தஞ்சாவூர் 'பலகைப் படங்களின்' நீட்சியாக பல மினுக்கமான பொருள்கள் ஒட்டப்பட்டவை. இவை இன்றைய யாழ்ப்பாணத்தில் புலனாகின்ற காண்பியங்களைப் புரிந்து கொள்ள உதவும் என்பதுடன் ஆரம்பகால பதிப்புப் படங்கள் பற்றிய குறுக்கு வெட்டுப் பார்வையை மட்டுமல்லாமல் 1930களின் மனவெளியில் பயணிப்பது போன்ற அனுபவத்தையும் தருகின்றன.

நன்றி:

முதுசம் - கலைவட்டம்

# இரட்டை விக்கெட் உலகக்கிண்ணக் கிரிக்கெட்: நியூஸிலாந்து சம்பியன்; இலங்கை 2ஆம் இடம்

இரட்டை விக்கெட் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்து அணி சம்பியனானது. இலங்கை அணி இத்தொடரில் இரண்டாம் இடம்பெற்றது.

மேற்கிந்திய தீவுகளின் சென். லூசியஸ் நகரில் இப்போட்டி நடைபெற்றது.

இச் சுற்றுப்போட்டி விதிகளின் படி, துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்தாலும் அவர் களத்தை விட்டு அகலாமல் இருந்தார். பதிலாக 10 ஓட்டங்கள் குறைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் அரையிறுதிப் போட்டிகளும் இறுதிப் போட்டிகளும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்திய அணியை இலங்கை அணி 3 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 68 ஓட்டங்களைப் பெற்றது. கிறிஸ்கைகல் 46 ஓட்டங்களையும், கார்ல் ஹூப்பர் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணியின் சார்பில் அரவிந்த டி சில்வா 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மஹேல ஜயவர்த்தன 60 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 71 ஓட்டங்களைப் பெற்றது. மஹேல 42 ஓட்டங்களையும் அரவிந்த 24 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 5 ஓட்டங்கள் கிடைத்தன.

இதனால், இத்தொடரில் முதல் தடவையாக தோல்வியுற்று வெளியேறியது மேற்கிந்திய அணி. (எ)

# இங்கிலாந்தில் தங்குவதற்கு ஒலங்காவுக்கு அனுமதி

இங்கிலாந்தில் தங்கி பணிபுரிய வேகப்பந்து வீச்சாளரான ஹென்றி ஒலங்காவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் போது ஸிம்பாப்வே அணிக்காக விளையாடியவர் ஒலங்கா. ஸிம்பாப்வேயில் ஜனநாயகம் செத்துவிட்டது என்று குற்றஞ்சாட்டி, முதல் இரண்டு போட்டிகளில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடி தனது எதிர்ப்பை ஒலங்கா தெரிவித்தார். அதன்பிறகு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் வேண்டுகோளுக்கிணங்க தனது முடிவை மாற்றிக் கொண்டு ஒலங்கா விளையாடினார்.

இந்த நிலையில் ஈ-மெயில்கள் மூலம் ஒலங்காவுக்கு மிரட்டல்கள் வரவே, உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் ஒலங்கா, ஸிம்பாப்வேக்கு திரும்பவில்லை. இதனிடையில் அவுஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியளித்த ஒலங்கா, 'நான் நடந்துகொண்ட விதத்தில் வருத்தம் ஏதுமில்லை. ஸிம்பாப்வேயில் அரசியல் சூழ்நிலைகள் மாறினால் மீண்டும் அங்கு திரும்புவேன்' என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், தற்போது இங்கிலாந்தில் வேலை பார்ப்பதற்கு ஹென்றி ஒலங்காவிற்கு அந்நாடு அனுமதி வழங்கியுள்ளது.

இங்கிலாந்தில் தன்னுடைய புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் முனைப்பில், அங்கு செல்வதற்கு ஒலங்கா தயாராகி வருகின்றார்.

உலகக்கிண்ணக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்குப் பின்பு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஒலங்கா ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

'இது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கப் பலர் உழைத்துள்ளனர். அனைவருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

'நான் இங்கிலாந்து சென்ற பின்பு எனக்காக உழைத்த அனைவருடைய நட்புக்கும் கைம்மாறு செய்வேன்.

'எனது கனவு நனவாகியுள்ளது. இருப்பினும் ஸிம்பாப்வேயில் நிலவும் சூழ்நிலை மாறிய பின்பு நான் மீண்டும் அங்கு செல்வேன்' - இவ்வாறு ஒலங்கா கூறியுள்ளார். (எ)


## க.பொ.த. (உ/த) பரீட்சை ஆவணங்களை இணைப்பு நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்

2003.04.21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. (உ/த) பரீட்சை ஆவணங்களை பிராந்திய சேகரிப்பு நிலையத்திலிருந்து இணைப்பு நிலையங்களுக்கு விநியோகம் செய்வதற்கும், திரும்பவும் இணைப்பு நிலையங்களிலிருந்து பரீட்சை ஆவணங்களைச் சேகரிப்பு நிலையத்திற்கு எடுத்து வருவதற்கும் மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு அரச்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களையும் கூறுவிலைக்கான படிவங்களையும் அலுவலக நேரத்தில் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இக்கூறுவிலைகள் 2003.04.15ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ப.விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம். (C/27213)



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 11 - 1947

உதிர்வு 10 - 03 - 2003



### அமரர் டாக்டர் சிவா வேலாயுதம்

எமது குலவிளக்கின் மரணச்செய்தி அறிந்து விரைந்து வந்து உதவி செய்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் மாணவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கனடாவில் உள்ள எமது உறவினரின் வீட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்த உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (9.4.2003) புதன்கிழமை காலை நயினாதீவு கங்கா தரணி தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஜஸ்வரியம்,*
*3 ஆம் வட்டாரம், நயினாதீவு.* (16486) - குடும்பத்தினர்.


# மாகாணப் போட்டிக்குத் தெரிவு



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் வெற்றிபெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. அணி வீரர்களையும், அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ம)

## தாயகம் திரும்பியோரை பதிவுசெய்தல்

கடந்தகால போர்ச் சூழ்நிலை காரணமாக இந்தியா சென்று வசித்து தற்போதைய சமாதான சூழ்நிலையினால் மீளவும் தாயகத்திற்கு திரும்பியுள்ளோரின் விவரங்களை பதிவுசெய்யும் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து மீளவும் திரும்பியுள்ளவர்கள் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் நேரில் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கலவையாளர் இல்லாது சிரமம்

சண்டிலிப்பாய்,ஏப்.8

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையிலும், இளவாலை அரசினர் வைத்தியசாலையிலும் மருந்துக் கலவையாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. இதன் காரணமாக இவ்விரு வைத்தியசாலைகளிலும் பணிபுரியும் சிற்றூழியர்களே வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் நோயாளர்களுக்கு மருந்துகளை விநியோகம் செய்து வருகின்றனர்.

இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு இவ்விரு வைத்தியசாலைகளினதும் பொறுப்பதிகாரி யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-135)

## சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய்,ஏப்.8

பெரியவிளான் வடசேரி விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 15ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஒ-135)

அச்சுவேலி,ஏப்.8

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் சகஸ்ர மஹாசங்காபிஷேகம்எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு நடைபெறும். சகஸ்ர மஹாசங்காபிஷேகத்தை அடுத்து விசேட உற்சவம் நடைபெறும். (ஒ-11)

இணுவில்,ஏப்.8

கோண்டாவில் வடக்கு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் இறுதிநாளான்று சங்காபிஷேகமும் பூந்தண்டிகையில் காளி அம்பாள் திருவீதி உலாவும் நடைபெறும். உற்சவதினங்களில் இரவு 7.30 மணிக்கு சீர்காழி மகாபாரதம் எனும் தலைப்பில் சமய சொற்பொழிவாற்றுவார். (ஒ-49)

யாழ்ப்பாணம்,ஏப்.8

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் முற்பகல் 10.30மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 6.00மணிக்கு சண்முக குமரேசன் பாலசண்முகன் தெய்வீக சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-71)


**விற்பனைக்குண்டு**

எம்மிடம் பாவித்த ஸ்ரீரியோ, மொனோ (STERIO, MONO, 2061, 2040, 2092, 2197, 2582) SONY T.V. கள், SONY BX மொடல் டெக்குகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
முருகதாசன் எலக்ரோனிக்
அன் பான்ஸி
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (16526)


# 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் ஜயசூரிய



ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணியின் தலைவர் ஜயசூரிய ஒருநாள் போட்டிகளில் 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார். சார்ஜாவில் நடைபெற்றுவரும் நான்கு நாடுகள் கிரிக்கெட் போட்டிகளில் கென்யாவுக்கு எதிரான போட்டியின் போது 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் அவர். ஒருநாள் போட்டிகளில் இந்த இலக்கைக் கடந்த 4ஆவது வீரர் ஜயசூரிய என்பது குறிப்பிடத்தக்கது.

கென்யாவுக்கு எதிரான போட்டி ஜயசூரியாவுக்கு 299ஆவது ஒருநாள் போட்டியாகும். இந்தப் போட்டியில் 8 ஆயிரத்து 993 ஓட்டங்களுடன் ஜயசூரிய களம் இறங்கினார். இந்தப் போட்டியில் 13 பந்துகளில் 7 ரன்களை எடுத்தபோது ஒருநாள் போட்டிகளில் 9 ஆயிரம் ஓட்டங்களை ஜயசூரிய எட்டினார்.

சச்சின் டென்டுல்கர், மொஹமட் அசாருதீன், அரவிந்த டி சில்வா ஆகியோர் இதற்கு முன்பு ஒரு நாள் போட்டிகளில் 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களாவர். (எ)


## தவறிவிட்டது

கைதடிக்கும் நுணாவிலுக்கும் இடையில் தம்பிராசா ஸ்ரீதர் என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகளும் வாகன காப்புறுதிப் பத்திரமும், வரிப் பத்திரம், வைரம் பதித்த சங்கிலி, தோடு, மூக்கணம், சிறுதொகைப் பணம் என்பவற்றுடன் பேர்ஸ் ஒன்று 07.04.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். அல்லது அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தம்பிராசா ஸ்ரீதர்
மட்டுவில் தெற்கு, வேரக்கேணி,
கோயில் வீதி, சாவகச்சேரி. (16527)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்.அரசடி மணிக்கூட்டு வீதி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தாவும் செயலாளரும் ஆகிய

### கந்தையா அருணகிரிநாதன்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல அரசடி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

*மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16526) நிர்வாகசபை
அரசடி விநாயகர் ஆலயம்



# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்வரத்தினம்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரமுத்து மற்றும் சரஸ்வதியின் மருமகனும் புஸ்பதேவியின் பாசமிகு கணவரும் மோகன்ராஜ் (பிரான்ஸ்), மதனி (வணிகத்துறை, முதலாம் வருடம், யாழ்பல்கலைக் கழகம்), நவராஜ் (A/L கலைப்பிரிவு 2004, அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆறுமுகம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அச்செழு,*
*நீர்வேலி.* (16529) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## திருமதி சின்னத்துரை சோதிப்பிள்ளை

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சோதிப்பிள்ளை நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏழாலை சின்னத்துரையின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, பத்மாவதி, அருணாசலம் (கௌஷிகன் மினிடீஸ் உரிமையாளர்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைராசா, அமரர் அருளம்பலம், சசிரேகா, பரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி - நுணாவில்,*
*சாவகச்சேரி.* (16528) தகவல்: அருணாசலம் (மாமா) (மகன்)

# நல்வாழ்வுக் கனி என்று புகழப்படும் நெல்லி

ஔவைப் பிராட்டிக்கு அதியமான் கொடுத்தது நெல்லிக்கனி. அந்த நெல்லியின் மகத்துவம் பெரிது. அது பற்றி இன்றைய கமழும் புலமும பகுதியில் பார்ப்போம்.

எமது நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் காணப்படுகின்ற நெல்லிமரமானது தானாகவே வளரக்கூடியது. அத்துடன் பயிரிட்டும் வளர்க்கக் கூடியது. இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, பர்மா, மலேசியா, சீனா, ஜப்பான், கொரியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் இது காணப்படுகின்றது. சமவெளியில் மட்டுமன்றி கடல் மட்டத்துக்கு மேல் 4 ஆயிரத்து 500 அடி உயரப் பிரதேசங்களிலும் இது வளரக்கூடியது. குன்றுகள், மலைப்பள்ளத்தாக்குகள் மற்றும் காடுகளிலும் நெல்லி மரங்கள் எளிதில் வளர்கின்றன. இவற்றைக் காட்டு நெல்லி எனவும் வீடுகளில் வளர்க்கின்ற நெல்லி மரங்களை 'தோப்பு நெல்லி' எனவும் அழைக்கின்றோம். காட்டு நெல்லியிலும் பார்க்க தோப்பு நெல்லி பெரிதாக இருக்கும்.

பார்வைக்கு அழகாகக் காணப்படு




கின்ற இந்த நெல்லிமரங்கள் சுமார் 15 அடி உயரம் வரையில் வளர்கின்றன. நெல்லிமரத்தடிக் காற்றில் அசுத்தமும் வெப்பமும் நீக்கப்படுகின்றன. வேப்பமரத்தடிக் காற்றை விட நெல்லி மரத்தடிக்காற்று நல்லதென முன்னோர்கள் கூறியுள்ளனர். நெல்லி மரத்து நிழலில் விஷக் கிருமிகள் பிரவேசிப்பதில்லை.

சாதாரணமாக நெல்லியை அரை நெல்லி, முழுநெல்லி என இருவகையாக அழைக்கிறோம். அரைநெல்லியை விட முழு நெல்லியே அதிக மருத்துவ குணங்களைக் கொண்டது. இதன் இலைகளை ஆவி வெளியேறாதவாறு நீரில் வேக வைத்துக் குடித்தால் பித்தம் நீங்கும். இலைகளை நீரில் போட்டு அவித்து வடிகட்டி அந்த நீரில் வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்புண் விரைவில் குணமாகிவிடும். மருத்துவ நூல்களில் 'நல்வாழ்வுக் கனி' என்று நெல்லிக்கனியைக் குறிப்பிடுகிறார்கள். இளமை குன்றாது காக்கக்கூடிய, அதிக காலம் வாழ்வதற்குத் துணை செய்யக்கூடிய 'காய கல்பம்' எனும் மருந்து, நெல்லிக்கனிகளால் செய்யப்பட்டதாகவே சித்தர் நூல்கள் கூறுகின்றன.

இந்தியாவின் கொங்குநாட்டு மன்னன் அதியமான் காட்டில் வேட்டையாடச் சென்றபோது, ஓங்கி வளர்ந்திருந்த நெல்லிமரம் ஒன்றைக் கண்டான். அதன் கனியை உண்பவர்கள் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழலாம் என்பதை அறிந்த அவன், உலகிற்கு நெடுங்காலம் சேவை செய்யக்கூடியவர் ஔவையாரே என உணர்ந்து அவருக்குக் கனி ஒன்றைக் கொடுத்து உண்ணச் செய்தான் என்பது வரலாறு.

முதுமையை எதிர்க்கின்ற தன்மை நெல்லிக்கனியில் உள்ளது என்று மொஸ்கோ உயிரியல் பௌதிக கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 1980 ஆம் ஆண்டில் கண்டு பிடித்துள்ளனர். எமது மூதாதையருக்கு இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் தெரிந்த நெல்லிக்கனியின் மகிமையை இவர்கள் தற்பொழுது கண்டு பிடித்துள்ளனர். கிறிஸ்துவுக்குப் பின் 15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் பாரசீக நாட்டில் தொற்றுக்காய்ச்சலுக்கு பல



மருந்துகள் கொடுத்தும் பயனில்லாது போக நெல்லிக்கனிச்சாறு கொடுத்து காய்ச்சலைத் தணித்ததாக வரலாறு கூறுகிறது.

புதிய நெல்லிக்கனிகளில் விதைகளை நீக்கிவிட்டு சிறிது நீருடன் அரைத்துப் பிழிந்து சாறெடுத்துப் பருகலாம். வயிறெரிதல், சிறுநீர் எரிச்சல் என்பன இதனால் நீங்குவதுடன் அதிக தாகம் தணிந்து சிறுநீர் போக்கும் இயல்பான நிலையை அடையும். நெல்லிக்கனியில் விற்றமின்'சி' மிக அதிகளவில் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் கோடை காலங்களிலேயே நெல்லிக்கனி கிடைக்கிறது. இதையப் பலவீனம், உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு முதலிய நோய்களையும் இது குணமாக்கக் கூடியது. எனவே நெல்லியின் மகத்துவம் உணர்ந்து செயற்பட்டால் யாவர்க்கும் நலமே. ◆

**வைஷாலி**

# சிந்தனைத் தெளிவு மிக்க தீர்க்கதரிசி தந்தைசெல்வா

## நினைவுரையில் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

மதிநுட்பமும், சிந்தனைத் தெளிவும் மிக்க தமிழினத்தின் மிகப் பெரிய தீர்க்கதரிசி தந்தை செல்வா.

-இவ்வாறு தெரிவித்தார், யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

தந்தைசெல்வாவின் 105ஆவது பிறந்ததின நினைவுகூரல் வழிபாடு அண்மையில் யாழ்.சென்ஜோன்ஸ் ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இறைச் செய்தியை யாழ்.மறைகோட்ட முதல்வர் அருட்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் வழங்கினார். நினைவுரை வழங்கிய சி.வீ.கே.சிவஞானம் மேலும் கூறியதாவது:-

தந்தை செல்வா இரண்டு முக்கிய ஒப்பந்தங்களை மேற்கொண்டார். பண்டாரநாயக்கவுடனும் பின்னர் டட்லியுடனும் செய்யப்பட்ட அந்த ஒப்பந்தங்கள் சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பாலும், தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினாலும் முறிவடைந்தன.

அப்போது தந்தை செல்வா "நம்பினோம், ஏமாந்தோம்" எனக்கூறி தவறை ஏற்றுக் கொண்டார். "இப்போது எம்முடன் பேசாவிடின், அடுத்து வருபவர்களுடன் நீங்கள் பேசுவது கடினமாக இருக்கும்" எனக்கூறி சிங்களப் பேரினவாதிகளுக்கு அன்றே எச்சரிக்கை விடுத்திருந்தார். சமஷ்டிக் கோரிக்கையை சிங்களத் தலைமைகள் ஏற்க மறுத்தமையினால், தந்தை செல்வா தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தார்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையின் அவசியத்தை அன்றே வலியுறுத்திய இவர், தமிழ் தலைமைகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

தந்தை செல்வாவின் தனித் தமிழீழ அரசியல் கோட்பாடே இன்று தமிழ்த் தேசியக் கோட்பாடாகப் பரிணமித்துள்ளது. தந்தை செல்வாவின் வழியில் அவரது பணியை இன்று புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னெடுக்கிறார் - என்றார் அவர். (எ-9-51)



வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலைக்கு விஜயம் செய்த மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் எம்.பாரூக், செயலாளர் பயசோம ஆகியோரை பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் எஸ்.கமலநாதனும் ஊழியர்களும் அழைத்துச் செல்வதை படத்தில் காணலாம். (எ-36)

# குடியேற்றம், வழிபாட்டுத்தலம் என்ற போர்வையில் அரச காணிகளில் அத்துமீறுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்

## காணி ஆணையாளர் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஏப்.8

அரசுக்குச் சொந்தமான காணிகளில் சட்ட விரோதமான முறையில் இடம்பெறும் குடியேற்றங்கள் மற்றும் கட்டடங்கள் (வழிபாட்டுத்தலங்கள் உட்பட) அமைத்தல் போன்ற பணிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு காணி ஆணையாளர் ஏ.ஜே.பததிரன சகல அரச அதிபர்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் சுற்றறிக்கை ஒன்றையும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொல்பொருள் திணைக்களத்தின் அல்லது காணி நிர்வாக உத்தியோக முறையான அனுமதியைப் பெறாது அரச காணிகளில் சமய வழிபாட்டுத் தலங்கள் பல அமைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனால், தற்போதைய சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் ஏற்படக்கூடும் என்பதுடன், சமாதானப் பேச்சுக்களின் போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பெரும் சிக்கலான நிலையைத் தோற்றுவிக்கலாம்.

இத்தகைய நடவடிக்கைகள் இரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாலும் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

எனவே, அரச காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுவது மற்றும் மதவழிபாட்டுத் தலங்களை அமைக்க இடமளிக்க வேண்டாம். களநிலை உத்தியோகத்தர்கள் இது விடயத்தில உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். தேவைப்படும் சமயத்தில் பொலீஸாரின் உதவியை நாடலாம் என்றும் -

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-86-100)

## மருந்துகளின்றி நோயாளர் அவதி!

சண்டிலிப்பாய்,ஏப்.08

தொல்புரம் அரசினர் வைத்திய சாலையில் 'பனடோல்' மாத்திரை உட்பட மற்றும் பல முக்கிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் வறிய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-135)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.குமாரசாமி கதிரமலைநாதன்**

அவர்கள் (கிராம அலுவலர் - வளலாய் J/284)

எமது பகுதி கிராம அலுவலர் திரு.கு.கதிரமலைநாதன் அவர்கள் கிராம அலுவலர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு நாம் அவர்களை உளமார வாழ்த்துவதோடு மேன் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
வளலாய் சன சமூக நிலையமும்
கலைக்கதிர் சன சமூக நிலையமும்

(16513)

**பாராட்டு விழா**



**திரு.சின்னத்தம்பி வைரமுத்து**

(தபாற் தரம்பிரிப்பாளர் - கரவெட்டி)

அவர்களை இன்று (08.04.2003) செவ்வாய்க் கிழமை 1.00 மணியளவில் கரவெட்டி அஞ்சல் அலுவலக மண்டபத்தில் தபால் அதிபர்

**திரு.அ.பரராசசிங்கம்**

தலைமையில் கௌரவிக்கும் விழா நடைபெறவுள்ளது. அதேவேளை, நாமும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(16470) - அஞ்சல் அலுவலக ஊழியர்கள்

**மொடேன் கல்வி நிலையம்**
நெல்லியடி.

**O/L DAY CLASS**

ஆரம்பம்:
09.04.2003 புதன்கிழமை
குறிப்பு: எமது வழமையான ஆசிரியர் குழு.

(C-27209)

**மாபெரும் மலிவு விற்பனை**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
சகல விதமான புடைவைகளையும்
விஷேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

**லலிதா புடைவை மாளிகை**

இல. 5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-27212)


## தவறிவிட்டன

செல்வரட்ணம் சுமித்திரன் என்பவரது விசேட அடையாள அட்டையும் வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரமும் கொக்குவில் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில் கடந்த 26.03.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 021-222 3425 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (16524)

# மரண அறிவித்தல்கள்

## குணசேகரம் சயிந்தன்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த குணசேகரம் சயிந்தன் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுரு குணசேகரம் - ஜெயக்குமாரி தம்பதிகளின் அன்பு மகனும் மாசீசன்கூடல் சிவகுரு - கனகம்மா, உரும்பிராய் வடக்கு ஐயாத்துரை - உலகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.*
*T.P:070-212617*

தகவல்:
சி.குணசேகரம்
(தந்தை)

(16525)

## திருமதி பொன்னையா அன்னம்மா

உடுப்பிட்டி, இமையாணன் துவாளி வீதியை வதிவிடமாகக் கொண்ட திருமதி பொன்னையா அன்னம்மா அவர்கள் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் அமரசிங்கம் (பரந்தன்), காலஞ்சென்ற துரைச்சாமி, தபோநிதி, கமலாதேவி, சிவஞானம், வியாகேசு, லீலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சீனிவாசகம், சின்னத்துரை, விநாயகமலர், அருந்தவமலர், உதயநாகேஸ்வரி, சுமதி (பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துவாளி வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
பொ.வியாகேசு (மகன்)
BEACON கல்வி நிலையம்,
வதிரி, உடுப்பிட்டி.

(16517)

# நேர்த்திமிகு தரைக்கு உறுதிமிக்க வைனைல் ஓடுகள்

(VINYL TILES)

தொழிற்சாலைகள்

அலுவலகக் கட்டிடங்கள்

வைத்தியசாலைகள் - பாடசாலைகள்

நவீன சந்தைகள்

விடுதிகள் - இல்லங்கள்

கடைகள் - வங்கிகள்

ஆகியவற்றுக்கு உகந்தவை

Interiors

தொ.பே: 074 729229, ஹொட்லைன்: 074 729240
பக்ஸ்: 698139, 075 347463
மின் அஞ்சல்: id@delmege.ccom.lk

டெல்மேஜ் இன்டீரியர் டெகோ (பிரை) லிமிட்டட்
டெல்மேஜ் போசைத் அன் கம்பனி லிமிட்டடின் கிளை நிறுவனம்
101, வினயாலங்கார மாவத்தை,
த. பெ. இல: 45, கொழும்பு 10, ஸ்ரீ லங்கா.
கிளை: இல. 398, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 5484

Delgraphics-ID1820.03


# 81 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினம்

## பாடசாலைகளுக்கான மாவட்ட ரீதியிலான
## சித்திரம், கட்டுரை, பேச்சு மற்றும் வினா - விடைப் போட்டிகள்

### விண்ணப்ப முடிவு திகதி - 17.04.2003

81ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினம் 2003 ஜூலை மாதம் முதல் சனிக்கிழமை அன்று கொண்டாடப் படவுள்ளது. அதனை நினைவு கூரும் முகமாக இம்முறையும் பாடசாலை மாணவர்களுக்கான மாவட்ட ரீதியிலான பல போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் 10 - 11 மற்றும் 12 - 13 தரங்களுக்காக நடத்தப்படும். அவற்றில் தமிழ் மொழியில் போட்டியாளர்கள் பங்குகொள்ளலாம்.

போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பணப்பரிசுகள் மற்றும் அன்பளிப்புகள், சான்றிதழ்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| விடயம் | தரம் | தலையங்கம் |
|---|---|---|
| கட்டுரை, பேச்சுப் போட்டி மற்றும் சித்திரம் | 10 - 11 | 1. கூட்டுறவும் தேசிய ஒற்றுமையும்.<br>2. கூட்டுறவின் ஊடாக நிலையான அபிவிருத்தி.<br>3. பாடசாலை கூட்டுறவுகளின் ஊடாகச் செய்யக்கூடிய நற்பணிகள். |
| கட்டுரை, பேச்சுப் போட்டி மற்றும் சித்திரம் | 12 - 13 | 1. கூட்டுறவுக் கொள்கையின் ஊடாக சமூக நற்பண்பு அபிவிருத்தி.<br>2. சிறந்த கூட்டுறவாளன் சிறந்த பிரஜையாகும்.<br>3. பாடசாலைக் கூட்டுறவானது எதிர்கால தலைமைத்துவத்தின் அத்திவாரம் ஆகும். |

கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளுக்கான தாம் விரும்பிய தலையங்கம் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கலாம். எனினும், பேச்சுப் போட்டிகளின் பொருட்டு உரிய மூன்று தலையங்கங்களுள் ஒரு தலையங்கம் போட்டி இடம்பெறும் சந்தர்ப்பத்தில் சீட்டிழுப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படும். இப்போட்டிகள் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடத்தப்படும். மாவட்ட மட்டத்தில் முதலிடத்தினைப் பெறும் போட்டியாளன் மாத்திரம் மாகாண மட்டத்திற்கும் மாகாண மட்டத்தில் முதலிடத்தினைப் பெறும் போட்டியாளர் மாத்திரம் தேசிய மட்டத்திலான போட்டிக்கும் தெரிவுசெய்யப்படுவர். வினா - விடைப் போட்டிகளுக்காக ஒரு போட்டி மாத்திரமே நடத்தப்படும். இப்போட்டியின்போது மாணவர்கள் தாம் விரும்பிய மொழி மூலமான வினாவினைப் பெற்றுக்கொள்ளவும் விடையளிக்கவும் முடியும். வினா - விடைக்கான குழுவானது ஒரு பாடசாலையில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 4 மாணவர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். அதனையும் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் மாவட்டத்தின் சகல பாடசாலைகளும் பங்குகொள்ளலாம். போட்டிகளுக்குத் தோற்றும் மாணவர்கள் தத்தமது விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

**விண்ணப்பப் படிவங்களை யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையில் பெற்றுக்கொள்ளலாம்.**

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டிய கடைசித் திகதி : 2003-04-17 ஆகும்.**

போட்டிகளுக்கான கால அட்டவணை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபையின் செயலாளரினால் அதிபர்களுக்கு பின்னர் அனுப்பிவைக்கப்படும்.

வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி
(2ஆவது மாடி),
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை.

(C/17208)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

08.04.2003

HAPPY BIRTHDAY



### மயூரன் ஆரணி

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட
திரு.திருமதி மயூரன் சிவச்செல்வி தம்பதிகளின்
**செல்வப்புதல்வி செல்வி ஆரணி**

இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை தனது தற்காலிக இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். அவரை அம்மம்மா, மாமாமார், அண்ணா (அருண்), மச்சாள், மச்சான்மார், கனடாவில் வசிக்கும் பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், மாமி அத்தை அனைவரும் புனித வேளாங்கன்னி மாதா அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய்.

(C/27210)

தகவல்:
திருமதி.தளையசிங்கம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சவரிமுத்து லூர்த்தம்மாள் (மணி)

நல்லூர், ஆசீர்வாதப்பர் வீதியைப் பிறப்பிடமாகவும் பாரதிவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து லூர்த்தம்மாள் (மணி) கொழும்பில் 06.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியல்பிள்ளை - சவினம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை சவரிமுத்து (அக்காஸ்சன்ஸ்) அவர்களின் மனைவியும் பெனடிட், காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் (விஜி) மற்றும் வதனி, சுரேஸ்குமார், சந்திரகுமார், ரஞ்சனி, ரஜி ஆகியோரின் அன்புத் தாயும் ரஞ்சனி, பவானி, காலஞ்சென்ற சக்கரிமென்தாஸ்,கிரி, நிலலினி, ராஜேந்திரன், செல்வராஜா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வியாழக்கிழமை (10.03.2003) கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*132/1, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கி.பவானி (மருமகள்), பேரப்பிள்ளைகள்,
கோபிநாத், பிரியங்கா.

(16515)

## குட்டித்தம்பி குருநாதன்

*(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும், அகில இலங்கை சமாதான நீதிவானும்)*

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி குருநாதன் (பிரபல கட்டட ஒப்பந்தகாரரும், அகில இலங்கை சமாதான நீதிவானும்) அவர்கள் 07.04.2003 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி அருமை ஆகியோரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா பொன்னம்மா ஆகியோரின் மருமகனும் கனகரத்தினம் அவர்களின் பாசமிகு கணவரும் சீதேவி, பேரின்பநாயகி ஆகியோரின் சகோதரனும் செல்வராணி தெய்வேந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, பிரியங்கா பந்தல் சேவை உரிமையாளர்), லோகேந்திரன் (பிரான்ஸ்), லோகராணி (பிரான்ஸ்), குணேந்திரன் (பிரான்ஸ்), ஜெயராணி (கனடா), ஜெயேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பாலசிங்கம் (உப அதிபர், யா/ஏழாலை மகா வித்தியாலயம்), மங்களேஸ்வரி, வனஜா (பிரான்ஸ்), செல்வராஜா (பிரான்ஸ்), ரமணி (பிரான்ஸ்), புஸ்பராசா (கனடா), கலைமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெகசுதன் (கணனி விஞ்ஞானம், பேராதனைப் பல்கலைக்கழகம்), ஜெகதீபன், (பொறியியற்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரியங்கா, இந்துஜா, விஸ்ணுஜன், மதுராந்தன் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), சுஜன் (பிரான்ஸ்), பானுஜன் (பிரான்ஸ்), கனிஷ்டா (கனடா), அமர்ந்தா (கனடா), சௌமியா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை தெற்கு,*
*மயிலங்காடு, சுன்னாகம்.*
***T.P: 070 212992***

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(16509)

## அமிர்தநாதர் றோசம்மா

பெரிய விளானைப் பிறப்பிடமாகவும், அன்ரனிஸ் லேன், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் றோசம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தநாதரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மரியநாயகம் (சிங்கம்) மற்றும் அருளானந்தம், அல்பிறட் (சின்ராசா - செட்டிக்குளம்), அன்ரன் லீனஸ், காலஞ்சென்ற யேசுதாசன் (கிளி) மற்றும் சந்திரா, லூர்துநாயகி, மரியறாஜ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளினா, புனிதசீலி, அற்புதம், செல்வறாணி, ஆனந்தி, மரியநாயகம், பிரான்சிஸ், புளோறின் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற அருட்சகோதரி லிகோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08-04-2003)செவ்வாய்க்கிழமை 3மணிக்கு நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அன்ரனிஸ் லேன்,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(16501)

**நாகம்ஸ் சுன்னாகம்**

விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த

**வசீகரா** (ரிலீஸ்) (16519)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம)

**ராஜா யாழ்ப்பாணம்**

ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா

**ரோஜாக்கூட்டம்**

10.30, 2.30, 6.30

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்

I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES

I.T.N. இன்

**புதுவருட மாபெரும் மலிவு விற்பனை**

புதுவருடத்தை முன்னிட்டு

(07.04.2003) திங்கள் முதல் 14.04.2003 புதுவருடம் வரை, இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள், புதிய, பழைய தமிழ் சினிமாப் பாடல்கள் மற்றும் MP - 3 கர்நாட்டிக் CDகள் அனைத்தும் மாபெரும் மலிவு விலையில்.....

'உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்'

**I.T.N. வீடியோ, ஓடியோ, மியூசிக் சென்ரர்**

305, பலாலி வீதி,

பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-27220)

I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES I.T.N. SALES



சக்தி TV — **யாழ். மண்ணில் சக்தியின் புதுவருடக் கொண்டாட்டம்** — சக்தி FM

இவ்வருட புதுவருடத்தை முன்னிட்டு சக்தி FM யாழ். மண்ணில் பின்வரும் நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

1) மரதன் ஓட்டப் போட்டி
2) சைக்கிள் ஓட்டப் போட்டி
3) அணிக்கு 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி
4) மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

மேற்குறிப்பிட்டுள்ள முதல் 3 போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்க்காணும விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி ஏப்ரல் 11 ஆம் திகதிக்கு முன்னர் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பப் படிவங்களை இதெற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பிக்கவும்.

*குறிப்பு:*

*கிரிக்கெட் போட்டிகளுக்கு முதல் விண்ணப்பிக்கும் 24 கழகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவர்கள் போட்டியன்று மைதானத்தில் விண்ணப்பிக்கலாம்.*

*விண்ணப்பிக்கும் கழகங்கள் / போட்டியாளர்கள் பங்குபற்றும் போட்டிகளின் விவரத்தை கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.*

**சைக்கிள்/மரதன் ஓட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவம்**

முழுப்பெயர்:........................................

முகவரி:........................................

தேசிய அடையாள அட்டை இல:........................................

விண்ணப்பிக்கும் போட்டி:........................................

.................. திகதி ........................ கையொப்பம்

**கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பப்படிவம்**

பங்குபற்றும் கழகம்:........................................

பிரதேச செயலர் பிரிவு:........................................

முகவரி:........................................

பங்குபற்றும் வீரர்கள் விவரம்:........................................

........................................

........................................

.................. திகதி ........................ கழகச் செயலாளர் ஒப்பம்

இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இது தொடர்பான மேலதிக விவரங்களை உதயன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:* உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இந்த விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பவும். (சி-27218)


## எம்.பிக்கள் சந்திப்பு வாரஇறுதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

தமிழர் விடுதலைப் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நாளைமறுதினம் இடம்பெறவிருந்த சந்திப்பு வார இறுதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக பிரதமருடன் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்கள் நடத்தவிருப்பதாகவும் -

இதன் காரணமாக சந்திப்பு வார இறுதிவரை பிற்போடப்பட்டுள்ளது. என்றும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஜ-3)


**BARATHY**

கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

**O/L DAY CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்

09.04.2003 புதன்கிழமை

8.00 a.m. (ப.நே)

எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

*குறிப்பு:*

சென்ற ஆண்டுபோல் இம்முறையும் 80 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

அனுமதிக்கு முந்துங்கள்!



**அறிவொளி**

நல்லூர்

**CHEMISTRY**

அடிப்படை அலகுகளிலிருந்தான துரித மீட்டல்

வினா - விடை வகுப்பு

**DIAS** B.Sc. (Hons). Spl in chem.

- ✯ கடந்தகால வினாத்தொகுப்பு
- ✯ மாதிரி வினாக்கள்
- ✯ பாடக் குறிப்புகள்
- ✯ பரீட்சை
- ✯ பரீட்சைக் கருத்தரங்கு

உள்ளடங்கலானது.

ஆரம்பம்: 09.04.2003

புதன்கிழமை பி.ப. 3.00மணி (16521)



M.SPELLMEN

**PERSONAL CLASSES**

Physics

Mr. ம.ஸ்பெல்மன்

**A/L 2005**

ஆரம்பம் : 09.04.2003 புதன் (5-6)

அலைகளும் அதிர்வுகளும்

mon, wed, fri - (5-6 p.m.)

**A/L 2004 பிரிவு II**

புலங்கள்

ஆரம்பம் : 12.04.2003 சனி (6.30-7.30 p.m.)

sat, sun - (6.30-7.30 p.m.)

இடம்: 18, மத்தியூஸ் வீதி, யாழ்.

PHYSICS PHYSICS


## சொற்பொழிவு

நெடுந்தீவு மேற்கு, நெழுவினி சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில், நான்காவது நாளான இன்று யாழ்பல்கலைக்கழக மாணவன தமிழ்வேந்தன் 'இறை சிந்தனையே எமக்கு வீடுபேறு தரும்' என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ)

## பவள விழா வைபவம்

வரணி,ஏப்.8

இடைக்குறிச்சி, ஸ்ரீசுப்பிர மணிய வித்தியாசாலையின் பவள விழா நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

(ஜ-170)


**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

✯ சாறிகள்
✯ ஸ்கேட் அன் பிளவுஸ்
} வாங்குவோருக்கு 10% விசேட விலைக் கழிவு

**இன்னும் மலிவான விலையில்**

தரமான துணி வகைகள், T.சேட், சல்வார் கமிஸ், முகூர்த்தப பட்டுப்புடைவைகள் மற்றும் சகல புடைவைகளையும் மனம் கவர் வர்ணங்கள் - நவீன டிசைன்களில் விரும்பத்திற்கு ஏற்ப பெற்றுக்கொள்ள --- வடமராட்சியில்

**J.R.M. TEX**

ஜே.ஆர்.எம். ரெக்ஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை (16514) உரிமையாளர் ம.றூபேட்.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலைய இயக்குநர் பொ.வியாகேஸ் அவர்களின் அன்புத் தாயார்

### பொன்னையா அன்னப்பிள்ளை

அவர்கள் நேற்றைய தினம் (07.04.2003) சிவபதமடைந்த செய்தி அறிந்து ஆறாத்துயரில் மூழ்கியுள்ள அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

BECON STUDY CENTRE
*வதிரி, கரவெட்டி.*

ஆசிரியர்கள், மாணவர்கள், கணித விஞ்ஞானப் பிரிவு (16531)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் தியாகராசா

தூதாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் தியாகராசா நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சந்தனத்தின் அன்புக் கணவரும் அற்புதமலர், இராசமாணிக்கம் (பிரதேச செயலகம், கரவெட்டி), மகாலிங்கம் (தொழிநுட்பவியலாளர் - கனடா), இரத்தினசிங்கம் (பொறியியலாளர்), புஸ்பமலர் (லண்டன்), செல்வமலர், ஜெலினா (ஆசிரிய மாணவி), செல்வரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா (சுவிஸ்), நளாயினி (கனடா), பத்மநாதன் (லண்டன்), ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் ராஜினி, சுயாதினி, திருமாறன், சுதர்சன், ரூபினி, சுகந்தன், நிந்துஜன், அனோஜன், நிக்சன், நிருஷான், நிகீதா, கோபிகா, பிரியங்கன், அனுசாந் ஆகியோரின் பேரனும் ஏகாம்பரம், சிவபாதசுந்தரம், புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் நாகலிங்கம் (லிங்கம்ஸ்), சிவபாதசுந்தரம் (ஆஸ்திரேலியா), அழகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தூதாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.* (C/27221)

தகவல்: தி.இராசமாணிக்கம் (மகன்)

### சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

*(கனகசிங்கம் - கனடா)*

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும், கெருடாவிலைப் புகுந்த இடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (கனகசிங்கம்) அவர்கள் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - கண்ணாத்தை தம்பதிகளின் அன்பு மகனும் கௌசலாதேவியின் அன்புக் கணவரும் சங்கரதாஸ், குமரதாஸ் (குட்டி), பாலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பூமணி, அமரர் துரைசிங்கம் நிர்மலாதேவி (மணி), பரமதேவி (கோமதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் அழகையா, பகவதியம்மா, வடிவேலு, நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமுதா, நர்மலா ஆகியோரின் மாமனாரும் கோசரனின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி, கெருடாவில் கிழக்கு, தொண்டமானாறு.* (சி-27119)

தகவல்: வடிவேலு (மைத்துனர்)

### திருமதி பவளராணி தளையசிங்கம்

ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளராணி தளையசிங்கம் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தளையசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தில்லையம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் தர்மகுலசிங்கம் (நீர்கொழும்பு), தசரதகுமார், ரூபகாந்தி, தர்மசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் விஜிதா (நீர்கொழும்பு), சியாமளாவதி, விஜயகுமார் ஆகியோரின் மாமியாரும் கில்ஷியா, தரங்கனி, பிரியம்ஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2003) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*56/12, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம்.* (16532)

தகவல்: த.தர்மகுலசிங்கம் (ரவி) (மகன்)


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

ராசி சில்க்ஸ் — நல்லி சில்க்ஸ்

இணைந்து செய்யும

**மாபெரும் மலிவு விற்பனை**

உண்மை! உண்மை!! உண்மை!!!
ஆனால் நம்பமாட்டீர்கள்.

ஒரு தரம் வந்து பார்த்தால் தெரியும் அதன் உண்மையை.
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை.
சாறிகளில் எத்தனையோ வகை!
70 டிசைன்களுக்கு மேல் (நோமல் முதல் பனாரிஸ் வரை).

✯ பஞ்சாபி ஹிற், சோளி ஹிற் எத்தனையோ டிசைன்களில் எண்ணற்றவை.
✯ சிறுவர்கள் ஆடைகள் பல டிசைன்களில்.

இளையவர் முதல் பெரியவர் வரை
அனைத்து ரக ரெடிமேற் ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏப்ரல் - 07 முதல் 14 வரை இக்கழிவு.

**ராசி சில்க்ஸ்**
70, 71A நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5571

(சி-27214)

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5573

# நாவற்குழி - தச்சன்தோப்பில் சட்டவிரோத மணல் அகழ்வு

## உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.8

நாவற்குழி - தச்சன்தோப்பு பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் இரவு வேளைகளில் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

தச்சன் தோப்பை அண்டிய கரையோரக் கிராமங்களில், இரவுவேளை உழவு இயந்திரங்களில் செல்வோர், இரவோடு இரவாக மணல் ஏற்றிச் செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி மணல் அகழ்தல் காரணமாக கிராமங்களினுள் கடல் நீர் உட்புகும் அபாயம் உள்ளதுடன் -

அப்பிரதேசக் கிணறுகளில் தண்ணீர் உவர்நீராக மாறுகின்ற நிலையும் உள்ளதென சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனை உடனடியாக நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (எ-9)

# பல்லாயிரக்கணக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணி ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் சென்ற பின்னர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

ஒன்றுகூடலின் ஆரம்ப உரையை அலபேட் நிகழ்த்தினார். சுவிஸ் பணியகப் பொறுப்பாளர் குலம் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கல்லறை தழுவும் கானங்கள், கடலோரக் காற்று, அலையின் வரிகள், கடற்புலிகள் ஆகிய இசைத்தட்டுகள் மற்றும் ஒளித்தட்டுகள் என்பன வெளியிடப்பட்டன. அத்துடன் திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலும அவரது கையெழுத்துடன் வெளியிடப்பட்டது.

ஒன்றுகூடலின் இறுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்ற இருந்தார்.

தற்போது சுவிட்ஸர்லாந்துக்கு விஜயம் செய்திருக்கும் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அங்கு வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றவிருந்தார்.

நேற்றுமுன்தினம் சுவிட்ஸர்லாந்தின் தலைநகரம் பேர்னுக்கு விஜயம் செய்த அன்ரன் பாலசிங்கம் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் இரண்டு முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ஐ-4)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய வீதி, பொலீஸ் நிலைய வீதி, விகாரை வீதி என்பன மின் விளக்குகளாலும் அலங்காரத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு எழில் கோலமாகக் காட்சியளிக்கின்றது.

இயற்கை எழிலுடன் கூடிய திருமலையின் விவேகானந்தக் கல்லூரியின் கலை அரங்கம் அமைந்திருப்பதும் இயற்கை வனப்பு மிக்க ஓர் இடமாக காட்சியளிக்கின்றது. நவீன வசதிகள் கொண்ட அந்த அரங்கம் பொலிவாகக் காட்சியளிக்கின்றது. விழாவில் கலந்துகொள்ளும் தமிழ், சிங்களக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் என நூற்றுக் கணக்கானவர் திருமலை நகருக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

விழாவில் பங்குபற்றும் கலைஞர்கள், தங்கியிருக்க விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-3-290)

தரம் 3 -O/L வரை
இரண்டாந் தவணைக்கான வகுப்புகள் ஆரம்பம்:
10.04.2003
வியாழன் பி.ப. 3.30
N.E.I. நல்லூர்
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
(27217)

சித்தின்கேணியில் புதிதாக
Mr. ம.ஸ்பெல்மனின்
Physics Class
A/L 2005
ஆரம்பம் : 09.04.2003 புதன்
காலை 6.30 - 7.30
திங்கள், புதன், வெள்ளி (6.30—7.30)
சித்தன்கேணி சந்தி
(16512)

தேவை
பிரபல கணனி அச்சகம் ஒன்றிற்கு ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் மற்றும் Corel Draw, Page Maker தெரிந்த கணனி இயக்குநர்கள் (இருபாலாரும்) தேவை. வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்.
விளம்பர இலக்கம்: 1843
மே/பா உதயன்.
(16436)

SALE, SALE, SALE, SALE,
விற்றுத் தீர்த்தல்
சகல வகை புடைவைகள் அனைத்தும் 50 வித கழிவில் விற்பனை செய்யப்படுகிறது.
உடன் விரையுங்கள்.
மாருதீ ரெக்ஸ்
இல.1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(கையிருப்பு சொற்ப அளவு மட்டமே)
(C-27211)

நாளை ஆரம்பம்
O/L
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பிரிவு 2
DAY CLASS
ஆரம்பம்: 09.04.2003 (8.30-2.30)
- மாணவர்கள் அடையும் உயர் பெறுபேறுகள் ஆசிரியர்களின் திறமைக்குச் சான்றாகின்றது.
- பிரிவு 3 மிக விரைவில்
- சென்ற ஆண்டு போல் இம்முறையும் பிரவு 6 மட்டுமே.
- தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும்.
(16499)

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார் பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(16413)

## நிவாரண பொருள்களுக்கான வழங்கல் கட்டளை

இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகள் நாளைமுதல் யாழ். செயலகத்தால் வழங்கப்படவிருக்கின்றன.

இப்பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகள் வடமராட்சி, தீவகம், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட ப.நோ.கூ.சங்கங்களுக்கு நாளை காலை 9 மணி முதல் 12.00 மணிவரையும் -

அன்று பிற்பகல் ஒருமணி முதல் 2 மணிவரை ஏனைய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கும் - செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## பிரதேச சபை உப தலைவர் ஆயுதங்களுடன் கைது!

பிரதேச சபை உபதலைவர் ஒருவர் உட்பட நான்கு பேர் துப்பாக்கிகளுடன் மாத்தளைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை, யட்டவத்தை பிரதேச சபையின் உப தலைவர் எம்.பி. ஏக்கநாயக்க உட்பட நான்கு நபர்கள் வாகனமொன்றில் ஆயுதங்களுடன் சென்றபோது நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என பொலீஸார் தெரிவித்தனர். நான்கு துப்பாக்கிகளும் பெருந்தொகையான தோட்டாக்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என பொலீஸார் தெரிவித்தனர்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடக் குழியிலிருந்து துர்நாற்றம் வீசுவதை உணர்ந்த அயலவர்கள் அது பற்றி சுன்னாகம் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்து பொலீஸார் நேற்று அங்கு சென்று சடலத்தைக் கண்டுபிடித்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுமாலை சடலம் மலக் குழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. சடலத்தின் கழுத்தில் நைலோன் கயிறு காணப்பட்டது. கைகள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன. உடல் சாக்கினால் சுற்றப்பட்டு தலைகீழாக மலக்குழியினுள் இறக்கப்பட்டுக் கிடந்தது. சடலத்தில் வெள்ளை நிற ரீ-சேர்ட்டும் நீளக் காற்சட்டையும் காணப்பட்டன.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் அந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார். சம்பவ இடத்தில் நடத்தப்பட்ட விசாரணையின் போது பிரஸ்தாப இளைஞர் ஈ.பி.டி.பி. முகாமிலிருந்து காணாமற்போயிருந்தவர் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

சடலம் கிடந்த மலக் குழியிலிருந்து சுமார் நூறு யார் தொலைவில் தரையில் இரத்தக் கறைகள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி பிரேத பரிசோதனை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-86-45)

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.
O/L DAY CLASS
ஆரம்பம்: 09.04.2003
புதன் காலை 8.30
"SUPER GRADE"
ஆசிரியர் குழு
(16550)

SUBRA (14)
சித்தன்கேணி
A/L
2005
பிரிவு II
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்: 09.04.2003
காலை 10.00
★ பெற்றோர்களே! உங்கள் கனவுகளை நனவாக்க எம்முடன் இணையுங்கள்.
★ வலி.மேற்கில் கல்விக்கு தனியிடம் பதித்த ஒரே நிறுவனம்.
SUBRA
(C-27207)

## ஆனையிறவு ஊடான தரைப்பாதை திறக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தி

யாழ்குடாநாட்டுக்கான தரைவழிப் பாதையான ஏ-9 வீதி போக்குவரத்துக்கெனத் திறக்கப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. தரை வழிப்பாதை திறக்கப்பட்ட அன்றுதான் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளின் முதல் அணி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே நடைபெற்று வந்த யுத்தத்தினால் ஆனையிறவு ஊடான தரை வழிப்பாதை மூடப்பட்டிருந்தது.

பின்னர் கடந்த பொதுத்தேர்லில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பொது மக்களின் பாவனைக்கென வாரத்தில் ஆறு நாள்கள் திறக்கப்பட்டு வந்த இத்தரைப்பாதை கடந்த 6 ஆம் திகதி முதல் வாரத்தில் ஏழு நாளும் திறக்கப்படுவது தெரிந்ததே. (ஐ-8-117)

# ஈழ அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பர் சந்திரிகா குமாரதுங்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திகக விருப்பம் தெரிவித்தார். அதற்கு முதலமைச்சர் இசைவு அளித்ததைத் தொடர்ந்து திங்கட்கிழமை காலை கொழும்பில் இருந்து சந்திரிகா குமாரதுங்க சென்னை வந்தார்.

கிண்டி ஆளுநர் மாளிகையில் பூச்செண்டு கொடுத்து அவரை முதலமைச்சர் ஜெயலலிதா வரவேற்றார். அவர்கள் இருவரும் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே நடந்துவரும் பேச்சுக் குறித்தும், அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் முதலமைச்சரிடம் அவர் விளக்கினார்.

தமிழக அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் உள்ள பொதுப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இங்குள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கையில் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று ஜெயலலிதா வற்புறுத்தினார். விரைவாக அவர்களைத் திருப்பியழைத்து மறுவாழ்வுப் பணிகளைச் செய்யுமாறு அவர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்டுக் கொண்டார். தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது சர்வதேச எல்லையை தாண்டியதாகக் கூறி அவர்களை இலங்கை மீனவர்கள் சிறை பிடிப்பதைத் தடுக்க இலங்கை அதிபர் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பேச்சின்போது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பேரியல் அஷ்ரப் ஆகியோர் ஜனாதிபதியுடன் இருந்தனர். தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் லட்சுமி பிரானேஷ், நிதித்துறை செயலாளர் நாராயணன், பொதுத்துறை செயலாளர் பிச்சாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு புதுடில்லிக்குப் பயணமானார்.

இன்று காலை மத்திய வெளியுறவுத்துறை மந்திரி யஷ்வந்த் சின்காவை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேசுகிறார். நாளை அவா துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியை சந்திக்கிறார். ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் வாஜ்பாய் ஆகியோரை வியாழக்கிழமை அவர் சந்தித்துப் பேசவுள்ளார். அன்றிரவு அவர் கொழும்பு திரும்புகிறார்.

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நடத்திவரும் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா, இந்தியத் தலைவர்களுடன் கலந்து ஆலோசிப்பார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-3-4)

## கடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இருதரப்பினரும் மீறாது இருப்பதற்கான வழிவகைகளை உள்ளடக்கி கண்காணிப்புக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட திட்டவரைவு இருதரப்பினரதும் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்த கருத்துகளையும் சிபார்சுகளையும் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கண்காணிப்புக் குழுவினர் கேட்டுள்ளனர்.

அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளும் இந்தத் திட்டத்துக்கு இணங்கினால் இருதரப்பு பிரதிநிதிகள் மற்றும் நோர்வேத் தரப்பினர் இணைந்து எதிர்வரும் 24 ஆம்திகதி இது குறித்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவர் என்று கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது. (ஐ-3-4)

அறிவகம்
அச்சுவேலி
A/L - 2005
கலைப் பிரிவுக்கான புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
11.04.2003
(வெள்ளி பி.ப. 5.00 மணி)
(16510)

பிற்போடப்பட்டுள்ளது
A/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விசேட Logic கருத்தரங்கு
NEW SCIENCE COLLEGE
OR
NEW SCIENCE HALL
(கன்னாதிட்டி - யாழ்நகர்)
காலம் : 10.04.2003
(1.00 ம.ப.)
By: P.கமல், S.R.J.சுதன்
Note: வினாத்தொகுப்புகள் வழங்கப்படும்.
(16482)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன்

(உரிமையாளர், சிறி கிருஸ்ணா ஸ்பிறிங் மோட்டோர்ஸ்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மணிக்கூண்டு ஒழுங்கை, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன் நேற்று (07.04.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சிந்தாமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இந்திரமலரின் அன்புக் கணவரும் சரண்யா (யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சாரங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசேகரம், கிரிசாம்பாள், சிறிநாதன் ஆகியோரின் சகோதரனும் கப்டன் N.சோமசுந்தரம், திருமதி இராசா தனலட்சுமி, செல்வி சந்திரமலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1, மணிக்கூண்டு ஒழுங்கை, நீராவியடி.

தகவல்:
கப்டன் N. சோமசுந்தரம் (மைத்துனர்)

(C-27215)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.